பல்சுவை மின்னிதழ்
இதழ்-02
01.06.2020



தூமி
பல்கலை மின்னிதழ்
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

# ஆசிரியர் பதிவு

தூமியின் முதலாவது மின்னிதழிற்கு நாங்கள் எதிர்பார்த்ததை விட பலமடங்கு ஆதரவு வந்துள்ளமையானது மிகுந்த மகிழ்ச்சியையும் அதேநேரம் பொறுப்புணர்வையும் அதிகப்படுத்தியுள்ளது. உலகின் பல பாகங்களிலும் வாழ்கின்ற தமிழ் நல்லுள்ளங்கள் தொலைபேசி வழியாகவும், மின்னஞ்சல் ஊடாகவும், முகநூல் போன்ற சமூகவலைத்தளங்களின் மூலமும் தமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் எமது அன்பு நிறைந்த நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

எமது மதிப்புக்குரிய கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின் திருக்கரங்களால் இலத்திரனியல் முறையில் தனது பத்திரிக்கை பயணத்தை தொடங்கிய தூமிக்கு வெளியீட்டு விழாவில் அவர் வழங்கிய ஆலோசனைகள் முக்கியமானவை. இளையவர்களான எங்கள் பயணம் நேர் பட செல்ல பெரியவர்களின் வகிபாகம் அவசியமான ஒன்று.

தூமியின் இதுவரையான பயணங்களில் உடனிருந்த பெரியவர்கள் மற்றும் நண்பர்கள் இந்த மின்னிதழ் பயணத்தில் நிச்சயமாக பாதை நேர்பட உதவ வேண்டும். தவறுகள் விடும் போதெல்லாம் தவறாமல் சொல்லுங்கள். தவறியும் அந்த தவறு மீண்டும் ஏற்பட்டுவிடாதவாறு பார்த்துக்கொள்கிறோம். எமது முதலாவது இதழில் காணப்பட்ட தவறுகளை சுட்டிக்காட்டியவர்களுக்கு நன்றிகள். எழுத்துப்பிழை போன்ற தவறுகள் ஆங்காங்கே இடம்பெற்றன. இனிவரும் இதழ்களில் இவ்வாறான தவறுகள் தவிர்க்க கட்டாயம் முயற்சிப்போம்.

பக்கத்தின் அளவு பெரிதாக இருப்பதனால் உருப்பெருப்பித்து (zoom) வாசிப்பதில் கடினமாக இருப்பதாக சொன்னார்கள். அதனால் இந்த முறை ஒரு பக்கத்தின் அளவை குறைத்து, மொத்த பக்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளோம். இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் ஆக்கங்கள் வந்தமையும் பக்கங்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு முக்கிய காரணம். வாசகர்களையும் சரி, படைப்பாளிகளையும் சரி ஏமாற்றக்கூடாதென்பதே எங்கள் இலக்கு. எனவே, தரமான ஆக்கங்களுக்கு எப்போதும் தூமி களம் அமைக்கும்

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்

–ஆசிரியர்–

# அட்டைப்படம் பற்றி....

புகைப்படவியலாளர் - ந.ஜதீசன்


இந்த புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் கிளிநொச்சியின் யூனியன் குளம் பிரதேசம். வீதி ஓரங்களில் நிழற்குடைகள் வைத்து பிரயாணிகள் இளைப்பாறி செல்ல வழியமைத்த எம்முன்னோர்கள் மரங்களை நிழற்குடையாக்கி வீதியையே நிழலால் மறைத்த விந்தையைத்தான் இந்த புகைப்படம் காட்டுகிறது. தமக்கு பயன்படாது என்று தெரிந்தும் தம் சந்ததிக்காக மரம் வைத்த இவர்கள் போற்றுதலுக்கு உரியவர்கள்.

எமது மண்ணில் சமீப காலமாக பல அமைப்புக்கள் மரநடுகையை முன்னெடுப்பது பாராட்டுக்குரியது. ஆனால் நட்ட மரக்கன்றை வளர்த்தாக வேண்டிய கடமையும் எமக்கு உண்டு. அது தான் உண்மையான பலனைத் தரும் பணி. தன் வீட்டின் முன்னுள்ள வீதியோர மரக்கன்றுக்கு கூட நீர் விட எம்மில் பலர் தயாராக இல்லை என்பது கவலைக்குரிய விடயம். அதோடு அமைப்புக்கள் பணத்தையும் நேரத்தையும் செலவழித்து மரக்கன்றுகளை நட்டு, விலங்குகள் உண்ணாதவாறு பாதுகாப்பு வேலிகளை அமைத்தால் அதை திருடிச் செல்லும் மனிதர்களும் எம்மிடையே தான் வாழ்கிறார்கள். நல்லவற்றை நாம் செய்யாவிட்டாலும், செய்பவர்களுக்கு உதவாவிட்டாலும், தீமை செய்யாமலாவது இருக்க வேண்டும்.

அதோடு தற்போது வன்னிக்காடுகளில் பயன்தரு பெரு மரங்கள் பல சட்டத்திற்கு முரணாக பணத்திற்காக வெட்டி வீழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கும் கொடுமையை தடுத்து நிறுத்தியாக வேண்டும். எம் முன்னோர் தம் சந்ததி அனைவருக்காகவும் வளர்த்தெடுத்த மரங்களை அழிக்க எவருக்கும் உரிமை இல்லை.

ஜீன் மாதம் 05ம் திகதி உலகமெங்கும் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அடிநாதமாக உள்ள மரங்களை பாதுகாப்பதோடு, இவ்வாறான நிழற்குடைகளை எம் மண் எங்கும் ஏற்படுத்த வேண்டியதும் எம் தார்மீக கடமை ஆகும். இதனை நினைவுறுத்தும் முகமாக தூமியின் இரண்டாவது மின்னிதழ் முகப்பு படம் அமைந்திருக்கிறது.

# இவ்வார படம் சொல்லும் கதை






ஆடல் 02

காவியமோகன்

எகிப்து நாட்டு பேரழகி கிளியோபட்ராவின் காதுகளில் மின்னியது ஈழத்து முத்துக்கள் என வரலாறு வாய் பிளக்கிறது. தமிழர் தம் வாழ்வியல் கூறும் இலக்கியங்களிலும் முத்துக்களும் முத்தமிழும் கடலும் அலையும் போல கலந்தே பயணித்திருக்கின்றன.

மன்னார் வளைகுடா பகுதியில் முத்தரிப்புத்துறை பிராந்தியம் ஈழத்தின் முக்கிய தலமாய் முத்துக்குளிப்பில் பெரும் புகழை தன் வசம் கொண்டிருந்தது. சேறு அதிகம் இல்லாத கலங்காத நீரும், வளர்ச்சி குறையாத சிப்பிகளுமாய் முத்துச்சிப்பிப்படுக்கைகளால் நிறைந்திருந்தது. மன்னார்க்கடல். அது தவிர்த்து நயினாதீவு, காரைதீவு மற்றும் சில தீவுப்பகுதிகளிலும் முத்தெடுக்கும் முயற்சி தொடர்ந்து கொண்டு இருந்தது.

எண்ணிப் பார்க்கையில் கற்பனைக்கு எட்டாத செல்வத்தை அள்ளித் தந்து உலகின் பார்வையில் ஈழத்தை சமுத்திரத்தின் நடுவே மின்னச் செய்த முத்துக்கள் ஒளிந்துள்ள சிப்பிகளை தேடும் முத்துக்குளியல் காட்சி ஒன்றை இலங்கை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் பெரும்படை சிறு தொலைவில் காண நேர்கிறது.

கப்பல்கள் மூலம் ஆழ்கடல் பகுதிக்கு வந்த முத்துக்குளிப்போர் அங்கிருந்து சிறுசிறு நாவாய்கள் மூலம் கீழே இறங்கினார்கள். நாவாய்களை செலுத்துவதற்கென இருவரும், முத்துக்குளிப்பதற்கு ஒருவரும், கயிற்றினை பிடிப்பதற்கு இருவருமென ஐவரை ஏற்றிக் கொண்டு அரச அதிகாரி 'அடப்பனார்' தலைமையில் ஒவ்வொரு நாவாயும் சமுத்திரத்திற்குள் பயணிக்க தொடங்கியது.

முத்துக்குளிப்பவன் இடுப்பை சுற்றி சிப்பிகளைச் சேகரிப்பதற்காக பையொன்றைக் கட்டிக் கொண்டான் பிறகு அவனை ஒரு கல்லிலே கட்டி கடலில் இறக்கினர். அவன் முத்துச் சிப்பிகளை சேர்க்கையில் நாவாயில் உள்ள இருவரும் அவனைக் கயிற்றிலே பிடித்துக் கொண்டு கண்ணும் கருத்துமாகக் கண்காணித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்து முத்துக் குளித்தவன் மேலே வந்து நாவாயில் இருப்பவர்களிடம் தான் சேகரித்த முத்துச் சிப்பிகளை ஒப்படைத்து விட்டு சிறிது ஓய்வு எடுத்தபின் மீண்டும் முத்துக் குளிக்கக் குதித்தான்.நேரஞ்செல்லச் செல்ல நாவாய்களில் முத்துச்சிப்பிகள் மலையளவாய் குவிந்தன.

முத்துக்கள் மீது பெருமோகம் கொண்டிருந்த படைத்தளபதி இந்தக்காட்சியை பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். 'இத்தனை சிப்பிகளுக்குள்ளும் எத்தனை முத்துக்கள் இருக்கும்?' என அந்தச்சிப்பிக்குவியலை முத்துக்குவியலாய் கற்பனையில் எண்ணிப் பார்த்தபடி 'ஆனால் ஏன் அவர்கள் யாரும் சிப்பியை திறந்து முத்தை பார்க்கும் ஆர்வமிற்றிருக்கிறார்கள்?' என கலபதியை கேட்டான்.

'இல்லை தளபதி. அதை இப்போது எடுக்க முடியாது. இவர்கள் இந்த முத்துச் சிற்பிகளை கொண்டு போய் கடற்கரை மண்டபத்தில் குவிக்க வேண்டும். முத்து வணிகர்களிற்கு அங்கு ஏலத்தில் விடப்படும். அரசனது போர் வீரர்கள் காவல் புரிய சில நாட்களுக்கு பின்புதான் சிப்பிகளை ஒவ்வொன்றாகத் திறந்து நன்றாகக் கழுவி முத்துக்களை வெளியில் எடுப்பார்கள். வடிவத்தையும் மினுக்கத்தையும் வைத்து அவற்றின் தரத்திற்கேற்ப அரச அதிகாரிகள் அவற்றை வகுப்பார்கள். நல்ல தரமான அரிய வகையான மூன்று அல்லது நான்கு ஆணி முத்துக்களை பெறுவதற்கு கிட்டத்தட்ட பதினைந்து கண்டிகளுக்கும் (1 கண்டி=68.2கிலோகிராம்) அதிகமான சேகரிக்கப்பட வேண்டுமாம். வருடத்தில் எல்லா மாதங்களிலும் முத்துக் குளிப்பதில்லை என்பதனாலே முடியுமானவரை மூச்சடக்கி அதிக சிப்பிகளை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்றான் கலபதி.

'அடடா, எவ்வளவு நேரம் மூச்சடக்குகிறார்கள் இவர்கள்!' என வியந்தபடி ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டான் தளபதி. 'இப்படி எத்தனை மாதங்கள் இவர்களால் முத்துக் குளிக்க முடியும்?' என கலபதியை விசாரித்தான்.

'சித்திரை, வைகாசி மாதங்களிலே தான் முத்துக்

குளிப்பார்கள் தளபதி. வைகாசி மாதம் முடிந்து விட்டால் அதற்கு பிறகு முத்துக் குளிக்க முடியாது. ஆனாலும் அந்நாட்களில் பரவர் சங்கு குளிக்கத் தொடங்கி விடுவார்கள். சங்குகள் வங்காளத்திற்கு பெரிதும் தேவைப்படுகின்றனவாம். ஏராளமான சங்குகள் அக்காலங்களில் வங்காளத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சங்கில் அழகான ஆபரணங்கள் செய்யவும் சிறு பாத்திரங்கள் செய்யவும் கூட இலங்காபுரி மக்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஏன்? இப்போதெல்லாம் கிறித்தவ தேவாலயங்களில் கூட சங்கினை பயன்படுத்துகின்றனராமே' என கலபதி அடுக்கடுக்காய் தான் அறிந்தவற்றை கூறி தளபதியை மேலும் ஆச்சரியப்படுத்தினான்.

'வளங்களை வளமாய் பயன்படுத்துவதில் இலங்காபுரி மக்கள் வல்லவர்கள் என தஞ்சையில் கோவிந்தர் ஒருமுறை என்னிடம் உரைத்தார். அது எவ்வளவு உண்மை என்பதை இலங்காபுரியில் பாதம் பதிக்கும் முன்னே நான் அறிந்து கொண்டேனே' என கூறி தன் பாக்கியத்தை எண்ணி ஒருமுறை சிரித்துக் கொண்டான் தளபதி.


'ஆம் தளபதி. கோவிந்தர் சர்வலோகமும் அறிந்தவராயிற்றே. அவர் கூற்றிலே தவறிருக்குமா? மன்னர் கூட அவர் பேச்சிற்கு மறுபேச்சு உரைப்பதில்லையே' என கலபதி செல்லிக் கொண்டிருக்கும் போதே படைத் தளபதியின் உள்ளத்தில் வயது முதிர்ந்த தஞ்சை ராஜ மந்திரி கோவிந்த தீட்சதரின் உருவம் மரியோதையோடு வந்து மறைந்தது.

'உண்மைதான் கலபதி. இன்றைய இந்தப் பெரும் படை கூட கோவிந்தரின் வேண்டுகளிற்காகவே அரசர் இட்ட கட்டளையாகும். அவரின் வாக்கு பொய்யாகாது என்பதே என் பெரிய நம்பிக்கை' என்றான் தளபதி.

'நான் தங்களை பற்றியும் நன்கறிவேன் தளபதியாரே! இந்தப் பயணம் வெற்றிப் பயணம் என்பதில் எனக்கு துளியளவும் ஐயமில்லை!' என குறுஞ்சிரிப்போடு கூறினான் கலபதி.

'ஆகா! தங்கள் பேச்சிலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது கலபதி' என கூறிக்கொண்டே கலபதியின் தோள்களை தட்டி பேரிலைச்சலோடு சிரித்தான் தளபதி. கலபதியும் அந்த சிரிப்பிலே இணைந்து கொண்டான்.

பொழுது நண்பகலை எட்டியிருந்தது. வெயிலின்



உஷ்ணம் மரக்கலங்களில் அதிகமாய் உணரப்பட்டது. ஆனால் கண்கள் விரிய இலங்காபுரியின் கரைகளை நோக்கி நின்ற வீரர்களை அந்த உஷ்ணம் பெரிதாய் வருத்தியதாக தெரியவில்லை. வானளாவ வளர்ந்து நிற்கும் வரவேற்புக் கொடிகள் போல் நெட்டைப் பனைகள் நாகதீபத்தின் அடையாளங்களாய் நிமிர்ந்து நின்றன.

கலங்கள் ஊராத்துறை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கும் போது காணுகின்ற காட்சியெல்லாம் வீரர்களின் ஆர்ப்பரிப்பை அதிகரித்துக் கொண்டே சென்றன. ஏராளம் வானம்பாடிகளும், பெரிய காதுகளை உடைய ஒருவகை பறவைகளும், சத்திரங்கள் போன்ற மண்டபங்களும் அவற்றினிடையே ஓடித் திரியும் கலைமான் கூட்டங்களும், அத்தோடு எதிர்பாராத பெரும் எண்ணிக்கை யிலான வீரர்களின் படை ஒன்றும் நந்திக் கொடி தாங்கி ஊராத்துறையில் காத்திருப்பதை படைத்தளபதி கண்டான். அந்தக்காட்சி அவன் உள்ளத்தில் குதூகலத்தையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே ஏற்படுத்தியது.


கலங்கள் துறைமுகத்தை வந்தடைந்தன. ஊராத்துறைமுகம் முழுதும் ஐயாயிரம் வீரர்களின் மரக்கலங்களால் நிரம்பியிருந்தன. அதனிலும் அதிகமான பெரும்படையோடு ஊராத்துறை சமுத்திரவாசலில் கம்பீரமாக நின்று கொண்டிருந்தான் நல்லூர் இராசதானியின் சேனாதிபதி மகிழாந்தகன்.

**படை நகரும்...**



"மக்கள் இறக்கிறார்கள், ஆனால் புத்தகங்கள் ஒருபோதும் இறக்காது. எந்த மனிதனும் எந்த சக்தியும் நினைவகத்தை ஒழிக்க முடியாது. இந்த போரில் புத்தகங்கள் ஆயுதங்கள் என்று நமக்குத்தெரியும். மனிதனின் சுதந்திரத்திற்கான ஆயுதங்களை உருவாக்குவது உங்கள் அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்."

பிராங்க்ளின் டி.ருஸ்வெல்ட்
அமெரிக்க முன்னாள் சனாதிபதி.
(இரண்டாம் உலகப்போர் காலத்தில் தன் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்).



கண்கள் கவரும் அவன் வதனம்
இமை மூட மறுக்கும் அவன் விழிகள்
நாசிகள் முகரும் அவன் நறுமனம்
வேய்ங்குழல் தவழும் அவன் செவ்விதழ்
மூரல்கள் நிறைந்த அவன் அணல்
அலங்கை அலங்கரிக்கும் அவன் ஆகம்
மனதை வசீகரிக்கும் அவன் புன்னகை

நினைவில் பெருகும் அவன் குழல் நாதம்
இவ்அணிகளின் மன்னவன் என்னவனை(ஐ)
என்று காண்பேனோ!

ராதா!!!




சாரல் 02

# இலங்கையின் சட்டங்கள்

அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

இலங்கையின் சட்ட முறைமை என்பது பல வர்ணங்களை கொண்ட ஒரு கலவையை போன்றது. அது எப்படி என்றால் அனைத்து வர்ணங்களும் சேர்ந்து ஒரே நிறமாக தென்படுவது அல்ல, அது பல வர்ணங்கள் பக்கம் பக்கம் சேர்ந்து இருப்பதற்கு ஒப்பானதாகும். என்பது முன்னாள் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதியும் சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த சீ.ஜீ. வீரமந்திரி அவர்களது கருத்து.

இந்த பல வண்ணங்களின் கலவையின் மூல ஊற்றானது இங்கிலாந்து, அரேபியா மற்றும் இந்தியாவின் கங்கை சமவெளி வரை செல்லக்கூடியதாகவும் இன்னும் ஒரு பக்கம் ரோமாபுரி மற்றும் நெதர்லாந்து நாட்டில் உருவாகிய சட்டங்களுடன் பக்கம் பக்கமாக இலங்கைக்கே உரித்தாகிய சுதேசிய வழக்காறுகளின் கலவையாகயும் பார்க்க முடியும்.

இலங்கையின் இன்றைய சட்டங்களை சுருக்கமாக கூறினால் எங்களது நாட்டில் காணப்படும் கலாசார வேறுபாடுகளின் வெளிப்பாடாகவும் பல நூற்றாண்டின் காலனித்துவ ஆட்சியின் பிரதிபலிப்பாகவும் காணக் கூடியதாக உள்ளது.

இலங்கை போன்ற பல்வகைமை சட்ட தளம் கொண்ட ஓர் நாட்டில் நாம் பல்வகைமையான சட்டங்களினால் காலம் காலமாக இன்று வரை ஆளப்படுகின்றோம்.

இந்த பத்தியானது இன்று சுதந்திரம் அடைந்து ஏழுபத்தி இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் இவ் இலங்கை தீவின் சட்டங்களும் அவற்றின் தோற்றுவாய் மற்றும் அவற்றின் இன்றைய பரிணாம மாற்றங்கள் பற்றிய ஒரு தேடல்............!

இலங்கையில் இன்றைய நிலையில் எம்மை வழி நடத்தும் சட்டங்கள் என்று நோக்குகையில் எமக்கே உரிய சுதேச சட்டங்கள் முதல் காலனித்துவ காலத்தில் எமக்கு விதந்துரைக்கப்பட்ட அந்நிய சட்டங்கள் மற்றும் இன்றைய நியதிச்சட்டங்கள் வரை வகுத்தும் தொகுத்தும் காட்டலாம்.

இவ் அந்நிய சட்டங்கள் என நோக்கும் போது நாம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயரின் காலனித்துவ நாடாக நாம் விளங்கியிருந்தோம். இவ் அந்நிய நாட்டவர் தமது நிர்வாக தேவைகளிற்காக தமது சட்டங்களை இலங்கையில் அமுல்படுத்தினர்.

இதன்படி இலங்கையை முதலில் காலனித்துவ நாடாக ஆக்கிய போர்த்துக்கேயர் காலத்தில் இந்த சட்டங்கள், நீதித்துறை பற்றி எந்த முன்னெடுப்புக்களும் எடுக்கப்படவில்லை. முதன்முதலில் 1656ஆம் ஆண்டு ஒல்லாந்தர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட உரோம டச்சு சட்டமும் (Roman Dutch Law) மற்றும் பின்னால் வந்த ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலச் சட்டமும் (English Law) இன்றைய இலங்கையின் சட்ட தளத்தில் முக்கியத்துவம் பெறுபவை.

இன்று இந்த உரோம டச்சு சட்டம் பெரும்பாலும்



குடியியல் விடயங்களில் செல்வாக்கு செலுத்துகின்றது. உதாரணமாக திருமண விடயங்கள் மற்றும் காணி விடயங்கள் என இன்னும் பல்வேறு விடயப்பரப்பில் இதன் ஆட்சிஎல்லையைக் காணலாம்.

பிரித்தானியர் காலத்தில் இன்றைய உலகின் நவீன சட்டம் என அறிமுகம் செய்யப்பட்ட ஆங்கிலச் சட்டமானது இன்று இலங்கை சட்டத்தில் இது பெரும்பாலும் குற்றவியற் சட்டம் மற்றும் வியாபாரச் சட்டம் போன்ற இன்னும் பல விடயப் பரப்புகளில் பயன்படுகின்றது.

இலங்கையின் சுதேச சட்டங்கள் எனப்படுபவை எமது நாட்டிற்கே உரிய எம்முடைய சட்டங்களாகும். இவை இலங்கையின் பூர்வீக மக்களால் ஆரம்ப காலம் தொட்டு மரபுகள் மற்றும் வழக்காறுகள் மூலம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வழமைகளாகும். இவை இன்று வரை இருப்பிலே காணப்படுவதோடு இன்று தமக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஒரு தளப்பரப்பை உடையதாகவும் காணப்படுகின்றன.

இன்று நோக்கின் சுதேச சட்டங்களை இலங்கையின் மூன்று வகையான சமூகத்தவர்க்கு உடைய மூன்று வகை சட்டங்களாக காண முடியும்.

01.தேசவழமைச் சட்டம்
02.கண்டியச் சட்டம்
03.முஸ்லீம் சட்டம்

தேசவழமைச் சட்டம் வடமாகாண தமிழர்களின் தனிச் சட்டமாகும். அதாவது வடக்கு மாகாண தமிழர்களால் பயன்படுத்தப்படும் வழக்காறுகள் என்பதே இதன் அர்த்தம் ஆகும். இச்சட்டமானது ஆள்சார் சட்டமாகவும் இடம் சார் சட்டமாகவும் தொழிற்படுகின்றது.

ஆள்சார் சட்டம் என்பது வடக்கு மாகாணத்திற்குரிய தமிழர்கள் இலங்கையில் எங்கு வசித்தாலும் அதாவது வடமாகாணத்திற்கு உள்ளேயும் அல்லது வடமாகாணத்திற்கு வெளியேயும் அவர்கள் தேசவழமையால் ஆளப்படுவார்கள்.

இடம்சார் சட்டம் என்பது வடமாகாண நிலங்கள் யாவும் இச்சட்டம் மூலம் ஆளப்படும். அந்நிலங்கள் யாருக்கும் சொந்தமாக காணப்படலாம். உதாரணமாக சிங்களவர் அல்லது முஸ்லீம் நபர் அல்லது தேசவழமையால் ஆளப்படாத தமிழர் ஒருவர் யாராவது காணியை வடமாகாணத்தில் கொண்டிருந்தால் அவர்கள் அக்காணி தொடர்பில் தேசவழமையினால் ஆளப்படுவார்கள், இது இடம் சார் ஆளுகை எனப்படும்.

தேசவழமை பெரும்பாலும் காணி, திருமணம் மற்றும் வழியுரிமையில் தனது ஆளுகையை கொண்டிருப்பது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயமாகும்.

இன்றைய தேசவழமை உண்மையில் வடக்கு மாகாண தமிழர்களின் அன்றைய வழக்காறுகள் தானா? அல்லது அன்றைய வழக்காறுகள் எவ்வாறு காலணித்துவ ஆட்சியின் போது மாற்றங்கள் அடைந்து திரிவுபட்டன! என்பது பற்றிய ஓர் ஆழமான மற்றும் ஓர் வேறுபட்ட கோணத்திலான தேடல் வருகின்றன சாரல்களில் தூறும்...!!

அடுத்து கண்டிய சட்டம், ஆரம்பத்தில் கண்டி இராச்சியத்தின் அனைத்து பகுதிகளிலும் இன மத வேறுபாடின்றி இச்சட்டம் பிரயோகிக்கப்பட்ட இச் சட்டம் இன்று கண்டிய மாகாணங்களில் வசிக்கும் கண்டிய சிங்களவர்கட்கு மட்டும் ஏற்புடையதாகும். இச் சட்டம் பெரும்பாலும் காணி, திருமணம் மற்றும் வழியுரிமை விடயங்களில் ஆளுகையை உடையது.

இந்த சட்டமும் காலனித்துவ ஆட்சியின் கீழ் அதன் செல்வாக்கினால் பல மாற்றங்களை பெற்ற ஒன்றாகும். உதாரணமாக பல்திருமண முறைமை ஒரு பெண் பல ஆண்களை திருமணம் செய்வதற்கான அனுமதியை கண்டிய சட்டம் வழங்கியிருந்த போதிலும் பிரித்தானியர் ஆட்சி காலத்தில் 1859 ஆண்டு இம் முறைமை தடை செய்யப்பட்டதை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.



அடுத்து முஸ்லீம் சட்டம், இது ஓர் ஆள்சார் சட்டமாகும். அதாவது முஸ்லீம்கள் இலங்கையில் எங்கு வசிப்பினும் அவர்கட்கு இச்சட்டம் ஏற்புடையதாகும். இச்சட்டம் திருமணம் மற்றும் வழியுரிமை என்பவற்றில் குறிப்பிட்ட ஆதிக்கம் உடையது.

இந்த நியதிச்சட்டம் என்று நோக்குகையில் இவையாவன பாராளுமன்றத்தால் தேவை கருதி ஆக்கப்படும் சட்டங்களாகும். இச்சட்டங்களே இன்று பெருமளவில் எம்மை வழிநடத்தும் சட்டங்களாக காணப்படுகின்றன. இலங்கை சட்டவாக்கத்துறையான பாராளுமன்றத்தில் இவை உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சட்டங்களின் அவற்றின் ஆளுகைப் பரப்பினை வைத்து அது குடியியற் சட்டம் அல்லது குற்றவியற் சட்டம் என பொதுவாக வகுக்கப்படும். சட்டம் ஓர் சமூக விஞ்ஞானம் ஆகையினால் அச் சட்டமானது சமூகத்தின் நடவடிக்கைகளிற்கு ஏற்ப அச் சமூக கட்டமைப்பிற்கேற்ப அதற்கான விளைவுகளை கொடுக்கின்றது. அதனால் சட்டமானது சமூக மாற்றங்களுக்கேற்ப அது பரிமாணமாற்றத்திற்கு உட்படக்கூடியது. கால மாற்றத்தில் மனித சமூக கட்டமைப்புகள் மாற்றங்கள் அடைய அடைய சட்டமும் பரிணாம வளர்ச்சிக்கு உட்படுவது நியதி.

இன்று சட்டம் என்ற சொல்லானது இலங்கையின் பெரும்பான்மையான குடிமக்களிற்கு ஒரு தண்டனையை மட்டுமே நினைவு படுத்தும் ஓர் பயமுறுத்தும் பதமாக மட்டுமே பார்க்கப்படுகின்றது.

ஆனால் உண்மையில் சட்டமானது இந்த சமூகத்தை வழிநடாத்தவும் வகுக்கப்பட்ட பாதையில் இருந்து வழிதவறியோரை நெறிப்படுத்தவும் அந்த குறிப்பிட்ட சமூகத்தினால் உருவாக்கம் செய்யப்பட்ட அந்த சமூகத்தை கட்டுப்படுத்தி வழிப்படுத்துகின்ற ஓர் சமூக விதிகள் மட்டுமே! ஆதலால் சட்டத்திற்கும் எமக்குமான அந்நியத் தன்னமையை களைந்து நாம் சமூகமாக ஒன்றிணைந்து பயணிக் வேண்டும். அப்போது தான் எமது உரிமைகள் பாதுகாக்கப்பட்டு எம் இருப்புக்கள் உறுதி செய்யப்படும்.

அப்போது தான் அண்ணல் அம்பேத்கரின் உரிமைகள் என்பவை சட்டத்தினால் காப்பாற்றப்படுவதில்லை. சமூகத்தின் சமூக உணர்வு மற்றும் நெறி உணர்வு ஆகியவற்றால்தான் பாதுகாக்கப்படுகின்றன என்ற கூற்று நிலைநிறுத்தம் செய்யப்படும்.

**சாரல் துறும்...**

சித்தமருத்துவம் எனும் சொல் இப்போது பலராலும் பேசும் பொருளாக மாறியுள்ளது. இதற்கு முன்னர் ஆயுர்வேத மருத்துவம் அல்லது சித்த ஆயுர்வேதம் எனப்படும் புனைப் பெயர்களுடனேயே அழைக்கப்பட்டது. சித்த மருத்துவம் பற்றிய வரலாறு எமக்கு தெரியாமல் போனதற்கு நவீனமயமாக்கலும் ஒரு காரணமாகும். அந்த வகையில் சித்தமருத்துவம் பற்றி அறிய முற்படுகையில் சித்தமருத்துவம் என்றால் என்ன? அதன் வரலாறு என்ன என்பது பற்றி அறிவு முக்கியமானதாகும். சித்த மருத்துவம் என்றவுடன் இந்தியாவின் தமிழ் நாடே நமக்கு முன்னிற்பது வழமை ஆனால் இலங்கைக்கே உரித்தான சித்த மருத்துவமும் இருக்கின்றது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

எனப்படும் தற்போதய Plastic surgeryஇனை அப்போதே கையாண்டுள்ளனர் என்பது ஆச்சர்யத்திற்குரியது. அந்த கால கட்டத்திலயே சித்த மருத்துவத்தில் அறுவை முறை இருந்துள்ளது என்பதை கம்பர் பின்வருமாறு கூறுகிறார்.

'உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்ததன்
உதிரம் ஊற்றிச் சுடலுறச் சுட்டு வேறோர்
மருந்தினால் துயரம் தீர்வார்.'

இப்பாடல் மூலம் அப்போதே அறுவை மருத்துவம் இருந்ததற்கான சான்று புலப்படு கின்றது. இராவணனின் வரலாற்றின் மூலம் இலங்கைக்கென தனித்துவமான மருத்துவ முறை இருந்தன என்பது புலப்படுகின்றது.

N.ஹரிசரந்

# ஈழத்தின் சித்தமருத்துவ வரலாறு

வரலாறுகளில் கி.பி 13ஆம், 14ஆம் ஆண்டுகளிலே சித்தர்கள் தோற்றம் பற்றி குறிப்பிடப்படுகின்றது. அந்த வகையில் சித்தர்களிடமிருந்து வந்ததால் இது சித்த மருத்துவம் என அழைக்கப்படுகின்றது. அத்துடன் சித்தம் என்றால் அறிவு என்ற பொருளும் உள்ளது. சித்தர்களின் தோற்றத்திற்கு முன்பே மருத்துவ முறைகள் இருந்திருக்க வேண்டும் அப்போது இந்த மருத்துவ முறைகள் தமிழ் மொழியிலும் தமிழர் கலாச்சாரம் சார்ந்து இருந்ததால் இது தமிழ்மருத்துவ முறை என்றும் ஆயுளை வளர்க்கும் அறிவு என்பதால் ஆயுள்வேதம் (ஆயுர்வேதம் அல்ல) என்றும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

குமரிக்கண்டம் பற்றி முழு வரலாறும் கிடைக்க பெறுமாயின் தமிழ் மொழியினதும் தமிழ் மருத்துவத்தினதும் செம்மை மேலும் வலுப்பெறும்.



இலங்கேஸ்வரம் எனும் இலங்கையை ஆண்ட இராவணனின் வரலாற்றை நாம் இலகுவாக கடந்துவிட முடியாது. இராவணன் ஒரு அரசன் என்பதை தாண்டியும் அவன் பல கலைகளில் தேர்ந்தவன். அந்த வகையில் மருத்துவ கலையில் மிக கைதேர்ந்தவன் போர்க்களத்தில் உடல் உறுப்புக்கள் இழந்தோருக்கு ஒட்டு மருத்துவம்




இவை மட்டுமன்றி சித்தமருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் அத்தியர் இலங்கையின் தட்சிணகைலாயம் எனப்படும் திருகோணமலையின் மூதூர் எனும் ஊரில் உள்ள கங்குவேலி கிராமத்தில் அகத்தியர் ஸ்தாபன சிவன் கோவிலை நிறுவினார். அத்துடன் இரண்டாவது தமிழ் பல்கலைக் கழகத்தையும் அகத்தியர் அங்கு நிறுவினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கான சான்றுகள் இன்றும் கங்குவேலி கிராமத்தில் பரவிக்கிடக்கின்றன. இவ்வாறு இலங்கையின் வரலாற்றுத் தொன்மைகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

அந்தவகையில் இலங்கையின் வரலாறுகளை கூறும் போது யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களினால் மருத்துவத்திற்கென சிறப்பான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பரராஜசேகரம், செகராசசேகரம் எனும் நூல்கள் இன்றும் ஒளி விளக்குகளாக காணப்படுகின்றன. இந்த நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பல மூலிகைகள் இலங்கைக்கே உரித்தானவைகள் என்பதே மிகச்சிறப்பாகும்.

இவ்வாறு இலங்கையின் சித்த மருத்துவ வரலாறுகள் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றை நாம் அறிந்திருப்பதுடன் இன்னும் எமது வரலாறுகளை தேடிய பயணங்களை தொடர வேண்டும் என்பதும் காலத்தின் கட்டாயம் ஆகும்.

# நிரமற்ற கடல்

த.விக்கினேஸ்வரன்
கஜுவன்கேணி

“ஆரு தம்பியா? எப்ப மன யாழ்ப்பாணம் இருந்து வந்தநி.”
“நான் வந்து ஒரு மூண்டு கிழம போல வரும் மாமா.”
“ம்ம்.. இருந்தாலும் கொஞ்சம் தள்ளித்தான் நிக்கனும்” எண்டு சொல்லக்குள்ளையே கசிப்பு நாத்தமும் வீடிப்புகையும் யாரெண்டத காட்டித்து. நேரத்தப் பார்த்தன் 8.00மணி ஓடி வந்து சைக்கிள வீட்டு தாவாரத்தில சாத்திட்டு, செய்தி பாக்க பக்கத்து வீட்ட ஓடிப்போனா ஊரே அங்கதான் கிடக்கு.

“ஓ நல்லா இரவுள திரி. எஸ்டிஎப்பு அடிக்காணாம்.”
“சும்மா சத்தம் போடாம கிடகா. இப்ப என்ன நேரம் பொயித்தா? இந்த வயசு போனதுகளோட கிடந்து படுற பாடு.”

“இஞ்சே உங்கட வாயலப் பொத்திக் கொண்டு இரிங்க செய்தியக் கேப்பம் ஒழுங்கா” எண்டார் பக்கத்து வீட்டு பொன்னையா அண்ணன்.

“இந்தா சரி கத குருணா (கொரோனா) முன்னூறத் தாண்டித்து. எல்லாரும் சாகப்பறம். டியேய் இதுக்குத்தான் அந்த சிமிக்கியக் கேட்டன் போன கிழமையே ஈடு வைக்க. இப்ப ஒண்டும் செய்ய ஏலா.” எண்டு சொன்னார் அவுச்சி.
“குழுக்களாகக் கூடுவதைத் தவிர்த்து, மீனவர்கள் தங்களது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.” எண்டு சொல்லி முடிய முதலே அப்பா போட்ட சத்தம் ரீவிக்கு மேலால வந்தித.
“அந்தா! கடலுக்குப் போகச்சொல்லிட்டானுகள் நமக்குப் பரவால்ல. ஒல்லுப்பம் சோத்துப்பாட்டா போகும். கொண்டக் காத்தாவும் கிடக்கு. வானமும் மழக்குணமா தான் இரிக்கி. கடலும் குழப்பம் எடுக்குமோ தெரியல.”
“செக்கலுக்கும் (மாலைப்பொழுதில் கடலுக்குச்செல்லல்) போக ஏலாது. அரசலாக்குதான் (அதிகாலையில் கடலுக்குப்போதல்) போகலாம் போல. காலும் ஏலாமத்தான் கிடக்கு.” என்று அப்பா புலம்பிக் கொண்டிருந்தார்.
“அப்போய் நான் இண்டைக்கு போரனே அத்தானோட. உங்களுக்கும் ஏலாம கிடக்குதானே. வேற வேலைக்கும் போகாம, ஒரே இடத்தில கிடந்து அலுப்பா கிடக்கு. இந்த பிரச்சன முடியும் மட்டும் போரனே.”
“ச்சீச்சீ!. வாய்ல மண். ஆக்கள் என்னத்தக் கதைப்பாங்க. கெம்பஸ்ஸ படிச்சித்து வந்து இந்த தொழிலா செய்யுற. இதுக்குதானா நானும் உன்ன படிப்பிச்ச.”
“அப்படில்ல அப்பா. எந்த தொழிலும் நேர்மையா செய்தா அதுதான் தெய்வம். நான் படிச்சித்து வந்தா இதெல்லாம் செய்யக் கூடாதெண்டு ஆரு சொன்ன. ஊரவன் ஆயிரம் கதைப்பான். உங்களுக்கு காலும் ஏலாதுதானே. இரவுக்கு நான் போரன்.”
“இல்ல தம்பி சித்திரக்குழப்பம் வேற. கடல் உரக்கும் (கொந்தழிப்பு) எண்டு தான் பயமாக் கிடக்கு.”
“ஒருக்கா நான் போய் பாக்கன். பிறகு எனக்கு கஸ்டமா இருந்தா போகல செரியா.”
“சரி நீ படிச்சி இருக்கா தானே பாத்து செய். ஆனா படிச்சா மட்டும் கடலுக்கு போக ஏலாது தம்பி.”
அத்தான் சொன்னமாதிரி சாமம் 3.00மணிக்கு எலாம் வைச்சித்து படுத்தன். இரவுக்கு கடலுக்குப் போறத நினைச்சுப் பாக்க பாக்க நித்திரையும் வரல. அப்பா முதல் நான் கெம்பஸில இருக்கக்குள்ள சொன்ன கதையேல்லாம் வந்து போகுது.
“ஹலோ! ஹலோ விளங்கல்ல. இல்ல கடலுக்குப் போனதா எண்டு கேட்டன்.”
“ஓ போனதான் ஒரு மீன் குஞ்சும் இல்ல. வலையும் பழசாப் பொயித்து. ஓங்கில் (டொல்பின்) கடிச்சி இடையில கிழிஞ்சு தொங்குது.”
“மத்தாக்கள் என்ன மாதிரி மீன் கொண்டந்ததா.”
“எங்க தம்பி நூறும், இரு நூறும் கொண்டுவாரானுகள். சிலவனுகள் பேயால புடிக்கானுகளாம். நமக்கதுகள் சரிவராது.”
“ம்ம்! சரி சரி யோசிக்காதிங்க. பாப்பம் கம்பஸ்ச நேரதுக்கு முடிச்சி ஒரு நல்ல வேலைய எடுத்தா எல்லாம் சரியா போகும் தானே.”

“விக்கி! விக்கி!”
“ஓஓ!”
“எழும்பு போவம்” எண்டார் அத்தான் சொல்லக்குள்ள மூண்டு மணி எலாம் கீறிட்டுக் கத்துது. அப்பதான் விளங்கிச்சி நான் படுத்த படுக்க.

போருக்குச் செல்லும் போர் வீரன் போல, மழ வெயில்ல இருந்து தப்ப புள்கை ரீசேட்டும் வொட்டம் ஜீன்சும் போட்டன். தங்கூசி கட்டை, கொழுக்கு, கத்தி, அத்தான்ட வெத்தில பார்சல் எல்லாம் போட்டு கூடையத் தூக்கி தோள்ல அடிச்சி, தண்ணி போத்தல, டிப்புல அடிக்கத்தான் தேத்தண்ணியக் கொண்டு நீட்டுறாவு அம்மா.

“இதக்குடி நித்திர தெளியும்.”
“அப்பா நீங்களும் எழும்பித்தீங்களா இந்த வருத்தத்தோட.”
“இந்த காத்துக்குள்ள உன்னக் கடலுக்கு விட்டுத்து நான் இஞ்ச நிம்மதியா நித்திர கொள்ளையா போரன்.”
“அது பரவால்லபா அத்தான் இருக்கார் தானே. அம்மா நான் கெம்பஸ்ல செய்த கைவேல தொப்பிய எடுத்துத்தாங்க.”

இது எல்லாத்தையும் எங்கட குட்டி நாய் பாத்திட்டுப் படுக்குது. நான் வெளிக்கிடக்குள்ளதான் குலைக்கிறதோ தெரியல்ல. பின்னால வந்தாலும் வரும். இப்பிடித்தான் நாங்க முதல் வளத்த வெள்ளையன முதல அடிச்சது.

“சரி வெளிக்கிடுவமா?...”
“ஓ போவம்” எண்டு சாமான் எல்லாம் எடுத்துக் கொண்டு ரோட்டுக்கு வரத்தான் அத்தான் சொன்னார்,
“கொஞ்சம் பொறு. அந்தா வாரவன்ட முகத்துல முழிச்சா ஒரு மீனும் படுறல்ல.”
“சும்மா போங்க அத்தான். நம்மட மூட நம்பிக்கை கதையளால தான் நாம ஏமாந்து போறம். அவன் இதால போகும வேறென்ன பறந்தா போற. அப்ப நீங்க அவனுக்கு முன்னுக்குப் போன பிரச்சின இல்லையா?”

முதலெல்லாம் கடலுக்குப் போகும் போது செருப்புப் போடாமத்தான் போவாங்க. இப்ப கல்லுக்குத்துது எண்டு செருப்புத்தான் போட்டுப் போறம்.

“என்ன விக்கி இரிக்க இரிக்க கொரோனா கூடித்தான்

போகுது. ஒண்டர மாசத்துல முன்னூறுல இருந்தது. அண்டைக்கு ஊரடங்க விடையும் டவுள் ஆகித்து."
"ஓம் அத்தான் பாருங்களன்."
"இன்னும் நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கல்ல. அதுக்குள்ள பள்ளிய திறக்கையாம், எலக்ஸன் வைக்கையாம் எண்டு என்ன பாடப்படுறானுகள். அதென்ன விக்கி கொம்பியூட்டர்ல படிக்கிறதாம் எண்டா?"
"நானும் இத யோசிச்சன் அத்தான். எல்லா விதமான பாதிப்பும் பாட்டாளி மக்களுக்குதான். கொம்பியூட்டர்ல படிக்கிற எண்டா அத்தான் பள்ளிக்கூடம் இல்லாம, ரீச்சர் இல்ல, புத்தகம் இல்லாம இதெல்லாம் இல்லாம இணையத்துல படிக்கிறது."
"அப்படியா! அப்படி எண்டா இது படிப்பே இல்லையேடா இதுல படிக்கிறது நல்லமா?"
"எங்க அத்தான் புத்தகத்த தொட்டு, ரீச்சருட்ட டவுட்ட கேட்டு படிக்கிறத போல வருமா இந்த படிப்பு. அது மட்டுமில்ல பெரிய போன் இருக்குற ஆட்கள் மட்டும் தான் படிப்பாங்க. இல்லாட்டி நம்மட கததான்."
"நல்ல நேரத்துக்கு நான் வீட்ட வந்தது. இல்லாட்டி இதுகள் ரெண்டு பொட்டயளும் ஒண்டும் படிக்காமத்தான் கிடந்திருக்கும்."

இப்படியே கொஞ்சத்தூரம் கதச்சிக்கொண்டு பொயிற்றம்.

"எண்டப்பீபீ!.. ச்சிசி ச்சிசி"
"அத்தான் என்ன?"
"கொம்மாடத் தல. இந்தா பீக்கும்பத்துல கால வைச்சிட்டன்டா. செடி நாத்தம். பாட்டி போடுற கிழையள் தான் வழில பேண்டு வெச்சிருக்கானுகள்."
அப்படியே கால தண்ணில தேச்சி தேச்சி காச்சட்டையையும் கழட்டித்தார். அப்ப தான் எனக்கு ஞாபகம் வருது. ஓ காச்சட்ட கழட்டுற தோணா வந்திட்டு போல. கரண்டிக்கால் தண்ணி நிக்கிற பள்ளத்துக்கு எல்லாம் பாலம் போட்ட நம்மட அரசியல்வாதிகள் இந்தப் பெரிய தோணாவக் காணல. தப்பித் தவறி ஆருக்கெண்டாலும் காலுல காயம் வந்தா கடலுக்கு போக ஏலாது. காயம் ஆறும் மட்டும் தொழில் இல்ல. இதெல்லாம் நினைச்சா கொஞ்சம் ஆவேசமாத்தான் கிடக்கும்.
"விக்கி கவனம். அங்கால சைட்டால போகாத. முதலையும் கிடக்கும் பாத்து வா. எனக்குப் பின்னுக்கே வா."

மழையும் உரக்க வெளிக்கிடுது. எப்படியும் நனையத்தான் வேணும். இப்பதான் இந்த இருட்டில கடலப் பாக்குறன். திருவிழாக்கடதான். எல்லாரும் வெளிச்சம் வச்சித்தான் கடலுல கிடக்கானுகள். அந்தப் புதினத்த பாத்திட்டு அடுத்த கால எடுத்து வைக்க முகம் குப்புற விழுந்தன். கொழுவி வைச்ச தண்ணி போத்தல் மண்டையில டமார் எண்டு விழுந்திச்சி. நல்ல காலம் கொழுக்கு ஏறல்ல.
"எண்ட புண்டே." எண்டுத்து அத்தான் ஓடி வந்து எழுப்பி விட்டார்.
"என்னத்தான் மணலெல்லாம் பெரிய கிடங்கா கிடக்கு."
"ஆ.. இதான் இப்பத்தைய கரவல இழுப்பு. ரக்டர் பூட்டித்தான் இழுக்குறானுகள். இந்த வேலையாலதான் முதல் மாதிரி மீனும் படுறல பாத்தியா. முதலெண்டா ரெண்டு பக்கமும் சேந்து ஒரே விசையில ,ழுக்கக்குல்ல வல சமனா வரும். நல்லா மீனும் படும். இப்ப அிதெல்லாம் ஒண்டுமில்ல. அம்பா பாட்டும் ரக்டரட சத்தம் தான்" அத்தான் சொன்னத கேட்ட போது பழைய நினைவெல்லாம் ஒரு கணம் வந்து போனது.

"ஏலோ ஏலேலோ!..
காட்டுக்குல கூட்டிப்போறான் ஏலோ ஏலேலோ!..
கரடிக்கூத்து காட்டப் போறான் ஏலோ ஏலேலோ!.."
இப்படி அம்பா பாட்டெல்லாம் சின்ன வயசுல அப்பாவோட கேட்டது. பாட்ட கேக்க கேக்க தானா உற்சாகம் வரும். கடக்கரையில நிறைய நண்டுகள் ஓடித்திரியும். இப்ப அதுகளும் இல்ல.
இப்படியே கதச்சிக்கொண்டு எங்கட தோணிக்கு கிட்ட வந்திட்டம். மழையும் விடுற மாதிரி தெரியல்ல.
தோணியத் தள்ளுவம் எண்டார் அத்தான். சகாயம் மாமாவும் கொல்லப் பக்கம் பிடிச்சார். நானும் எனக்கு தெரிஞ்ச மாதிரி தோணியப்புடிச்சி கடலுக்க தள்ளினம். போன வருசம் தான் இந்தக் கடல் குழப்பத்துக்க கந்தன்ட தோணி தாண்டு செத்துப்போனவன். இந்த வருசமும் ஆரையாவது பலி எடுக்கும்.
"அப்பா வரலையா?"
"இல்ல மாமா. வோட்டு ஏறி கால்ல காயம் தானே. அதான் நான் வந்தன். சும்மா தானே கிடக்கன் வீட்டுல இந்த கொரோனாவால."
"இந்தக் கடல்ல நாங்க படுற கஸ்டம் நீங்க படக்கூடா எண்டுதானே உங்கள படிக்க அனுப்பி வைச்சம். உங்கட தலைமுறையாவது நல்லா இருக்கனும். இந்த தொழில பழகி வேற ஒண்டுக்கும் போக சந்தர்ப்பம் வருதில்ல. சாகும் மட்டும் இந்த கடல்ல தான் கிடக்கனும். இப்பிடி இரிக்கக்குள்ள புறகு ஏன் மனே நீங்களும் வந்து கஸ்டப்படுறீங்க."
"இதான் மாமா நாம விடுற பிழ. காலங்காலமா இதே முறையிலதானே நாம மீன் பிடிச்சிக் கொண்டு இருக்கம். மற்ற இடங்கல்ள பாருங்க எவ்வளவு தொழினுட்பங்கள பாவிக்கிறாங்க. நம்மட சமூகத்துல கடலப்பற்றி படிச்சி அதுல எப்படி முன்னுக்கு வரலாம் எண்டு யாரும் யோசிக்கிறல."
"சரி மருமகன் நீ படிச்ச புள்ள பலதும் பத்தும் அறிஞ்சிருப்பா. எங்கட காலம் பொயித்து. இனி நீங்கதான் எல்லாதையும் பாத்துக்கொள்ளனும். கவனமா போயிற்று வாங்க."
உயிரப் பணயம் வச்சி இந்த கடல் குழப்பத்துக்குள்ளையும் வோட்டு, தோணிகள் எல்லாத்தையும் அலை விரியும் தூரத்திற்கு அப்பால் தள்ளி விடுறதுதான் அவர்ட வேல. பயத்துல வேற ஆக்கள் ஆரும் வரையும் மாட்டாங்க. பெரிய அலை தோணியப் பிரட்டும் எண்டா போற ஆக்கள்ட கத சரி. இடைக்கிடைக்க பெரிய காயங்களும் வரும்.
"விக்கி இழு இழு."
"சரியத்தான் சரியத்தான்"
"பெரிய கடல்(அலை) ஒண்டு வருது. வேகமா இழு. இல்லண்டா தாண்டு போய்டுவம்."
அப்பத்தான் திரும்பிப் பாத்தன் 10 அடிக்கு மேல அல வருது.
"இழு இழு"
"கஷ்டமா இருக்கு அத்தான்!"
"கொஞ்சம் மூச்சப்புச்சி இழு விக்கி. இன்னும் கொஞ்சத் தூரந்தான்."
எங்கட வேகம் எங்க. கடல்ட வேகம் எங்க. ஒரு மாதிரியா தப்பித்தம். புள்ளா தொப்பட்டம்(ஈரம்). அந்த மரணக்கிடங்க கடந்தாச்சு. இப்படித்தானே கடலுக்குப் போற ஆக்கள் எல்லாரும் கஷ்டப்படுவாங்க எண்டு எண்ணினன். கொஞ்ச நேரம் ஒண்டு கதைக்கல.

“என்ன விக்கி ஒண்டும் கதைக்காம வாறா.”
“ஒண்டுமில்ல அத்தான் கூதல் நடுக்குது.”
“பின்னுக்குத் திரும்பிப்பார். அந்தா தெரியிற வெளிச்சத்துக்கு கிட்ட போகனும். அங்க போனாதான் கொஞ்சம் எண்டாலும் சால மீன் பிடிக்கலாம்.”
“ஏலாம (முடியாம) இருந்தா கொஞ்சம் விட்டு விட்டு இழு” எண்டு அத்தான் சொல்லக்குள்ள என்ஜின் வோட்டு முறிக்கிக் கொண்டு அலைக்கு மேலால பாயுது.

“விக்கி ரோச் லைட்ட காட்டு. இல்லாட்டி நமக்கு மேல ஏத்திப் போடுவானுகள். இப்படித்தான் அண்டைக்கு ரோச்ச மறந்து வந்து இருட்டுக்க போகக்குள்ளதான். சைட்டால வந்து இடிச்சி கொப்பருக்கு கால்ல காயம். நல்ல காலம் அவர் அலட்டா இருந்த. இல்லாட்டி?”
“நாம கடலுக்கு நோகாம மீன் புடிச்ச காலம் எல்லாம் பொயித்து விக்கி. இப்பெல்லாம் பெரிய பெரிய வோட் என்ஜீன், தட செஞ்ச வலையள், டைனமோட்டு வெடியள், சிலிண்டர் எல்லாம் கொண்டு வந்து மீன் புடிக்கானுகள். நல்ல கள்ளு மலையலப் பாத்துதான் இதுகல பாவிக்கானுகள். அந்த பாறையல உடைச்சு அழிச்சா புறகு எப்புடி மீன் சின கட்டுற.”
“ஏன் அத்தான் இதெல்லாம் இப்ப தட செய்யப்பட்ட முறையள் தானே. உரிய ஆக்கள்ட சொல்லி கொடுத்தா என்ன?”
“எங்க விக்கி. எல்லாத்தையும் சப்போட்டோடதான் செய்றானுகள். நாம எதாவது கதைக்கையும் பயம். சாமான் வெச்சி இருக்கானுகள். மண்டையில போட்டுத்து போனா இந்தப் பெரிய கடல்ல ஆரு கேட்குற.”
இப்புடியே கதைச்சித்து இருந்ததில நேரம் போனதே தெரியல. மழையும் பெய்ய தொடங்கித்து. ஆழங்கட்டி மழ உடம்புல பட்டா செரியா நோகும்.
“கூடைக்குள்ல கிடக்குற சொப்பின் வேக்க எடுத்து தலைய மூடு. தடுமல், இருமல் எண்டா புறகு ஆஸ்பத்திரிக்கும் போகேலா. ஏதும் வருத்த மெண்டு டொக்டர்ட போனா அவர்ட முதகிட்டான் வருத்தத்த சொல்லனும். மூண்டடி தள்ளி நிண்டு தான் மருந்தெடுக்கனும். நீயும். யாழ்ப்பாணத்துல இருந்து வந்திருக்கா புறகு கொரனா எண்டு உன்ன கேம்புக்கு கொண்டு போய்டுவானுகள்”
எனக்கு அத்தான்ட கதையக் கேக்க சிரிப்பா பொயித்து. ஆனா அத்தான் சொல்ற மாதிரி மக்களுக்கு எவ்வளவு நெருக்கடி இந்த நோயாலையும், அரசாங்கத்தாலையும்.
“வலைய எடுப்பம் வா”
“என்னத்தான் ஒண்டையும் காணல”
“கொஞ்சம் சௌவுப்புதான். (சரியில்லை) வரும் வரும்.”
கொஞ்சம் முக்கி முக்கித்தான் வலைய எடுக்கார். வலையில மீனக்காணல பாசி, கல், குப்ப எல்லாம் புடிச்சி வல பாரமா கிடக்குறது அத்தாண்ட தோழ்லையும், உதடுலையும் நல்லாத் தெரியுது.
“இதான் மீனவன்ட நிலம. ஒரு நாள் அடிக்கிற அதிஸ்டத்துக்கு ஒன்பது நாள் படாத பாடு படனும். ஆனா எங்கலால யாவாரிக்குத்தான் நல்ல உழைப்பு.”
ஒத்தக்கண்ண மூடித்து ஒத்தக்கண்ணால கடலுக்க உத்துப் பாத்தா ஒண்டிறண்டு மீன் வலையில கிடக்குறது. அதுக்கு கீழால வல பிஞ்சி ( கிழித்து) தொங்கி கொண்டு வருது.
“அத்தான் வலட பாதிய காணல. பிஞ்சி வருது.”
“அது ஆம இல்லாட்டி ஓங்கில்ட வேலையா இரிக்கும். இனி அத போட்டு பொத்தனும்.” (பின்னுதல்)
அப்படியே அத்தானோட வலைய எடுத்துக் கொண்டு இருக்ககுள்ள. சூரியன் தக தக எண்டு எழும்பி வருது. அரவமற்ற இந்த பெரிய கடல், குளிர் காத்து எல்லாம் சேந்து உள்ளுக்க ஏதோ செய்யுது. காத்துல வயல் ஆடுற மாதிரி கடல் கிடக்கக்குள்ள ஒரு பெண்ணின் பிறப்புறுப்பில் இருந்து ஒரு உயிர் மெல்ல மெல்ல வாறது மாதிரி சூரியன தண்ட புது நாளுக்காக எழும்பி வரும். வெறும் வார்தையால மட்டும் இத சொல்ல ஏலாது.
கெம்பஸில இருக்கக்குள்ள பெயின்றிங் செய்ய நல்ல லொக்கேசனா பார்த்து அவுட்டோர் போவம். இத விட ஒரு அவுட்டோர் கிடைக்குமா எண்டு மனசுக்குள்ள நினைச்சன்.

“விக்கி.. விக்கி! டேய் விக்கி.”
“அத்தான்”
“போவமா”
“ஓமத்தான் ஓடத்தான் போவம் போவம்”
“பிராக்கு பாக்காம இருக்குற மீன் எல்லாத்தையும் கூடைக்குள்ள புறக்கி போடு. குடாவுக்க கொண்டு போனாதான் கொஞ்சம் எண்டாலும் விலையா குடுக்கலாம். வோட்டுக்காரனுகள் இடையில வந்தா வித்துத்து வரச்சொல்லி குடிக்கலாம் இல்லாட்டி நாலு மைல் இழுக்கத்தான் வேணும்”
நான் அவர பாத்து சிரிச்சன். அந்த சிரிப்ப அவர் ஒரு கலிப்பின் சிரிப்பா நினைக்கலாம். கோபங்கள், கொதிப்புக்கள், வேதனைகள், ஏக்கங்கள் இருக்கும் எந்த முகத்தையும் சிரிப்பால அடக்கலாம். மீன் இருந்தாலும்அ சரி இல்லாட்டியும் சரி அவங்க சிரிச்ச மாதிரிதான் வீட்டுக்கு வருவாங்க.
கண்ண இறுக்கி மூடினன். ஒண்டு ரெண்டு சொல்லி நூறு மட்டும் தண்டுக்கம்ப இழுத்து பின் பக்கமா பாத்தன் கொஞ்சம் தூரமாத்தான் குடா தெரியுது. அப்புடி இப்புடி எண்டு கஷ்டப்பட்ட மீனக் கொண்டு போனா வெந்தஸ் (ஏலம்) போடுறவன் அவனுக்கு கண்ணுக்கு குத்துற நல்ல மீன்கல விம்பி( வெளிப்படைக்களவு) அடிப்பான். அவன் எடுத்து முடிய ஆமிக்காரனுக்கும் கொடுக்கனும். இதெல்லாத்தையும் நினைச்சுக் கொண்டு போகக்குள்ள கர வந்தித்து.
“தோணிய புடிச்சிக் கொள்ளு விக்கி கொஞ்சத்தால வாரன்”
நான் தோணிய கடலுக்க போகாம புடிச்சித்து சுத்திப் பாத்துக் கொண்டு நிண்டன் சிங்களம் தான் கூடக்கதைக்குற சத்தம் கேட்டிச்சி. ஒரு விகாரையும் புதிசா கட்டி கிடக்கு, நிறைய வாடிகளும் தரமா கிடக்கு. முதலெண்டா இப்டி எல்லாம் ஒண்டுமில்ல இப்ப எண்ணத்தக்கதைக்க. எல்லாம் ஜெயவெவா! ஒரே மூச்சா இழுத்துக் கொண்டு எங்கட கரைக்கு வந்திட்டம். தோணிய இழுத்து முடிய கரையில நிண்டாக்கள் சொன்னாங்க 8.30க்குள்ள வீட்டுக்கு போய்டனும் இல்லாட்டி SDF அடிக்கானாம். எண்டு சொல்லக்குள்ள ஆக்கள் எல்லாம் ஓடி வாராங்க. நாங்களும் கெதியா வேலய முடிச்சித்து வீட்ட வந்து சேர்ந்திட்டம். அத்தான் முன்னூறு ரூபா காச தந்திட்டு வீட்டுக்குப் பொயித்தார்.
“இந்தாகா காசப்புடி. இதுல எங்க லோன் காசு கட்டுற, சாப்பாட்டுக்கு எடுக்குற. என்ன கஷ்டத்தப்படுதுகள் இந்த மீனப்புடிக்கிறதுக்கு”
“தங்கேஸ் மாமா தங்கேஸ் மாமா! அம்மா கடன் காசில 500 ரூபாயத் தரட்டாம்”
நான் ஒண்டும் கதைக்கல அப்பாட முகத்தப் பாத்தன். அவர்ட முகம் நிலத்தப்பாக்குது.

# மறுபக்கம்

கடந்த இதழில் விதியின் விளையாட்டில் ஒடுக்குமுறைக்கு எதிராக தன் மக்களுக் காக வீரனாய் எழுந்து வில்லனாய் மாண்ட ஹிட்லரைப்பற்றி அலசினோம். இன்று அந்த விதியினையே வென்ற வீரனைப் பற்றிப் பார்ப்போம். ஆம். இன்று பெரும்பாலான உலக நாடுகளைத்தனது தலையாட்டி பொம்மை யாக்கி அவர்களது தலைவிதியை தீர்மானிக்கின்ற ஆதிக்க சக்தி அமெரிக்கா என்றால் அந்த அமெரிக்காவையே நீ யார்ரா கோமாளி என்ட ரேஞ்ஜில டீல் பண்ண பெருமை பிடல் காஸ்ட்ரோ வையே சாரும். அப்படி என்ன விதத்தில் அமெரிக்காவை அவர் கோமாளியாக்கிட்டேர் உனக்கு? என்ற உங்களது கேள்விக்கணை களுடன் மறுபக்கத்தினுள் நுழைவோம்.

கோபி பிராகாஷ் திருக்குமரநாதன்

கொடுத்தது. கொஞ்சம் பொறு பிடல் காஸ்ட்ரோனு தானே சொன்னா என்ன இப்ப CIAவ இழுக்கிறாய்? பொறுங்க சேர் கதை இனிமேதான் ஆரம்பிக்க போது.

இரும்புத்திரை என்று வர்ணிக்கப் பட்ட சோவியத் யூனியனின் மூடிய கதவுகளுக்குள்ளே என்ன நடக்கி றது? வெளிநாட்டு விவகாரங்கள் என்ன என்று துப்பு துலக்க



## விதியினை வென்ற வீரன்

சாதாரண தரம் படித்துக்கொண்டிருந்த வேளை யில் உலக வரைப்படத்தில் இடங்களைக் குறித்தல் என்றால் நம்மில் பலருக்கு அலர்ஜி ஆனாலும் இந்த அமெரிக்காவையும் ஜப்பானை யும் குறிப்பது என்றால் நமக்கு அல்வா சாப்பிடுகின்ற மாதிரி. ஒன்று வரைப்படத்தின் இந்த தொங்கலில் இருக்கும் மற்றையது மறுபுறம் இருக்கும் ஆனால் நிஜத்தில் "பூமி உருண்டை சாரே" ஜப்பானிலிருந்து கள்ளக் களவாக படகில் வெளிக்கிட்டால் பசுபிக் ஊடாக வெகு சீக்கிரத்தில் வந்து விடலாம். இரண்டாம் உலகப்போரில் நேரடியாக ஈடுபடாமல் நாடுகளுக்கு ஆயுதங்கள் வழங்கி எட்டப்பனாக வியாபாரம் பார்த்துக்கொண்டிருந்த அமெரிக்காவின் சரித்திர பக்கத்தில் அவமானம் என்னும் அத்தியாயத்தை தொடக்கி வைக்க ஜப்பானு டைய அமைவிடம் வாய்ப்பாக அமைந்தது. ஆம். ஹிரோசிமா நாகசாகியில் அணுகுண்டை வீசும் அளவிற்கு பேர்ள் துறைமுகத்தில் ஜப்பான் ஆடிய கோரதாண்டவம் அது.

ஆனால் இப்படி தாக்குதலை சுதாகரிப்பதற்கான நேரம் கூட இல்லாத வகையில் இருந்து விட்டமே என்ற தவிப்பும், ஜோசப் டொனொவ னுக்கு அமெரிக்காவின் மீதிருந்த தேசப்பற்றும், சோவியத் யூனியனும் தனது கதவுகளை மூடியமையும் எண்ணி ஆறே ஆண்டுகளில் CIAஇன் தோற்றத்திற்கு வழியமைத்துக்

ஆரம்பித்த CIA எதிர்காலத்தில் உலக நாடுகளின் அரசியலிலும் ஏன் அமெரிக்காவிலும் கூட அரங் கேற்றிய தில்லுமுல்லுக்கள் உலகம் அறிந்ததே. அமெரிக்கா என்னும் மீசை முறுக்கிய வல்லரசின் பொம்மாலாட்டத்திற்கேற்ப ஆடுகின்றாயா இல்லை....... "அட இல்லைனு தான் சொல்லிப் பாரன் நீதான் தைரியமான ஆளாச்சே" என்று அமெரிக்காவிற்கு எதிரான/ அமெரிக்காவின் கொள்கைக்கு எதிரான (சுருக்கமாக கம்யூனிசம் என்றே சொல்லலாம்)

அரசாங்கங்களான இத்தாலியின் PSI, PCI இன் கூட்டணியில் கவிழ்த் ததில் ஆரம்பித்து பிலிப்பைன்ஸின் Hukabalahap என்னும் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவப்பிரிவை ஒடுக்கிய தில் தொடர்ந்து ஈரானில் மொசாதே வின் பதவியைப்பறித்ததில் தொடர்ந்து கவுதாமாலாவில் குஜ்மனைக் கவிழ்க்க PBSUCCESS காய் நகர்த்தி யது வரை வெற்றி வீரனாக வலம் வந்த CIAக்கு "மவனே



**கொரோனவால் வல்லரசுகளே திணறும்போது கியூபா அதை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியது அத்தோடு பிற நாடுகளுக்கு உதவ மருத்துவக்குழுக்களையும் அனுப்பி வைத்துள்ளது. அதுதான் கூறுவார்கள் விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை அவை விருட்சங்களாக மாறி உலகிற்கு நிழலூட்டும்**



உங்கொப்பனுக்கு அப்பன் வருவான்" என உருவெடுத்தது பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான கியூபா. CIA எவ்ளோ கெத்து பல மைல் தூரத்தில இருக்க நாட்டிலேயே நாஸ்தி பண்ணவங்க காலுக்கடில கிடக்க க்யூபா எம்மாத்திரம் இப்பிடித்தானே CIAகு நான் குடுத்த பில்டப்புக்கு நீங்க நினைச்சிருப்பிங்க அப்ப நாங்க நினைச்சது தப்பில்லையே என்டு விட்டா CIAவே உங்கட்ட புலம்பும் வகையில் அமெரிக்காவின் காலைச்சுற்றிக் கொண்டது பிடல் தலைமையிலான க்யூபா எனும் பாம்பு.

அந்த ராஜா கரடி கதை எல்லாருமே கேள்விப் பட்டிருப்பம் ஹரஹரமகாதேவகி Version கூடக் கேட்டிருப்பம். ஆமா ராஜா கரடிக்கு அம்பு விடுறான் நூல் இழைல மிஸ் ஆவுது அந்த ராஜாவோ மூணு வாட்டி தான் அம்பு விட்டான் ஆனா இந்த CIA காஸ்ட்ரோ என்ட கரடியைக் கொல்ல விட்ட அம்புகளோ 638. என்னடா புழுகிறாய் இதெல்லாம் ஓவர் என்று கேட்பவர்கள் காஸ்ட்ரோவே கைபட எழுதிய CIA கொலைமுயற்சிகள் தொடர்பான கட்டுரையையும், CIA Targets Fidal என்ற புத்தகத்தையும் புரட்டலாம். ஜேம்ஸ்பாண்ட் ரேஞ்சுக்கு ஆரம்பித்து கடைசியா வடிவேல் சீப்பு எடுத்திட்டா கல்யாணம் நடக்காது என்ட மாறி காஸ்ட்ரோவோட தாடியை எடுத்திட்டா அவருக்கு இருக்க மக்கள் செல்வாக்கை குறைச்சிடலாம் என்ட ரேஞ்சு வரைக்கும் போய்ட்டாங்க என்டா பாருங்களேன். காஸ்ட்ரோக்கு பிடித்த சுருட்டான ஹவானாவுக்குள் குண்டு வைத்து விட்டால் அப்புறம் டமால் டுமீல் தான், நீச்சலடிக்கும் போது விஷம் வைத்து விடுவது, பேனாவில் விஷம் வைத்து குத்தி விடுவது, காஸ்ட்ரோவின் காதலியை மயக்கி அவரை மயக்குவது, அவரது கைக்குட்டையில் விஷத்தை தடவுவது என்று வடிவேல் பாணியில் ஆரம்பித்து Bay of Pigs தாக்குதல் வரை சென்றாலும் அவர்களுக்கு காஸ்ட்ரோ சொன்னப்பதில் விஜயக்குமார் பாணியில் "உங்களால ஒரு................"

இதாவது பரவாயில்லை ஒரு கட்டத்தில் காஸ்ட்ரோ மேடையில் பேச்சாற்ற முன்னர் அவருக்கு போதைமருந்தை கொடுத்து "நம்ம சிங்காரி சரக்கு" என்று அவரை பாட வைத்து மக்கள் மீது அவருக்கு இருக்கும் செல்வாக்கை குறைக்க வேண்டு மென்றெல்லாம் கூட எண்ணியது. இதற்கும் ஒரு படி மேலே சென்று விவேகமில் வருகின்ற ஹோலோக்ராம் காட்சி போல ஜீசஸை அவதரிக்கச் செய்து கடவுள் நம்பிக்கையை வைத்தாவது அவரை மக்கள் மனதில் இருந்து அகற்ற முடியுமா என்று கூட முயற்சித்தது. ஆனால் எவ்வளவு முயன்றும் அது பலிக்கவே இல்லை ஏனெனில் Batista என்கின்ற கொடுங் கோல் அரசை விரட்டியடித்ததால் அவர் மக்கள் மனதில் பெற்றிருந்த மதிப்பினை வார்த்தைகளால் எடை போட முடியாது. கொரோனவால் வல்லரசுகளே திணறும்போது கியூபா அதை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியது அத்தோடு பிற நாடுகளுக்கு உதவ மருத்துவக் குழுக்களையும் அனுப்பி வைத்துள்ளது. அதுதான் கூறுவார்கள், "விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை அவை விருட்சங்களாக மாறி உலகிற்கு நிழலூட்டும் என்று. அமெரிக்கா அன்று அத்தனை தடைகளை விதித்தும் அதனை உடைத்து இன்று க்யூபாவை மருத்துவத் துறையில் தன்னிறைவு அடையச் செய்த தலைவன் மட்டுமல்ல விதியினை வென்ற வீரனும் கூட.

பிடல் காஸ்ட்ரோ!!!





தொண்டரடிப்பொடியன்

# கப்பச்சினோ கதைகள்



கப்பச்சினோ பேசுகிறேன் - என்
பூர்வீகம் வெளிநாடு
புகுந்த வீடு உங்கள் நாடு
சிலருக்கே சிநேகிதன் நான்
பலருக்கு பழக்கப்படாதவன் நான்
கோப்பியில் ஒரு வகை நான்
நுரை கூடியவன் நான் - இருந்தும்
விலை கூடியவன் நான்

அங்கே சிலர் சத்தமாய்
ரகசியம் கதைக்கின்றனர்..
எனக்கும் கேட்கிறது..
தேநீரில் நுரை இருக்கலாம்
இங்கே நுரையில் அல்லவா
சிறிது தேநீர் இருக்கிறது...
காற்றில் காணாமல்ப்போகும்
நுரைக்கு ஏன்
இவ்வளவு காசு?
காசு மிஞ்சினால்,
கப்பச்சினோ கேக்குதோ?

கடினமான சொற்கள்!
அப்பப்பா..
என் காது கேட்டறியாத சொற்கள்!
தேநீரின் நுரைகளில் குளித்தவன்,
கண்ணீரின் நுரைகளில் குளிக்கிறேன்!
புகுந்த வீட்டில் பிரச்சனைகளுக்கா பஞ்சம்!

நுரைதான் உள்ளது,
நிராகரித்தனர் சிலர்!
பானம் கசக்கிறது,
நிராகரித்தனர் சிலர்!
நிராகரித்த இவர்களே அந்த
வசைச்சொற்களின் உரிமையாளர்கள்!

நரையை மறைக்காத சிலர் - என்
நுரைக்குள் மறைந்த சுவையை
ரசித்தனர்...
ருசித்தனர்...
காசு போனாலும்
கசப்பாய் இருந்தாலும்
ரசித்துக்குடிப்பவர்களில்
காதல் எனக்கு!
நிராகரிக்கப்பட்டவர்களின் காதல் அது!

என்னில் இருக்கும் நுரைகள் சில
இதிகாசத்திலும் இருக்கின்றன..
இலக்கியத்திலும் இருக்கின்றன..
வரலாற்றிலும் இருக்கின்றன...

நுரைகளை பார்த்தவர்களே,
நுரைகளுக்குள் பாருங்கள்!!
அந்த பானத்தின் சுவை
சிலருக்கு கசக்கலாம்!
பலருக்கு இனிக்கலாம்!
கசந்தால் மருந்து!
இனித்தால் விருந்து!
மருந்தோ விருந்தோ
பருகி விடுங்கள்...
காலாவதியானால்
காலமும் வையும்!

இராமன் என்கிற நுரையில்
மறைக்கப்பட்ட சீதையின் சுவையை
சீதையே சொல்ல வருகிறாள்!
இராமனின் சீதையாக அல்ல,
ஜனகனின் மகள் ஜானகியாக...
வருகிறாள்.. வரவேற்க தயாராகுங்கள்!

காரம் அதிகமாக இருக்கலாம்!
காத்திருங்கள் கற்கண்டோடு...
அடுத்த இதழில்!!!



# மனஅழுத்தமும் சமாளித்தல் திறனும்

T.சிவானந்தன்
உளவியல்துறை மாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

மனவழுத்தம் என்பது எதிர்மறையான மன எழுச்சி அனுபவங்களால் நடத்தையில்/ உடல் சார்ந்த இரசாயன இயக்கங்களில் நிகழும் மாற்றம் ஆகும். மேலும் இது குறுகிய/ நெடுஞ்சோதனைகளில் உருவாகுவது ஆகும். இந்த மாற்றங்களை தூண்டும் நிகழ்வுகளை மனஅழுத்தத் தூண்டிகள் என்கின்றோம். மனிதர்கள் வாழ்க்கை நிகழ்வுகளில் அநேக பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் அது அவரவர் மனநிலையை பொறுத்து மாறுபடுகின்றது. ஒருவர் ஓர் சூழ்நிலையை எப்படி எதிர் நோக்குகிறார் என்பதைப்பொறுத்து மனவழுத்தத்தின் வீரியம் மாறுபடும். அதேபோல ஒருவரது பலவீனத்தை பொறுத்தும் மனவழுத்தம் மாறுபடும். ஒருவரது பலவீனமானது அவரவர் இயல்புணர்வு, மீளும் தன்மை சமாளித்தல் திறன் (Coping Skill) மற்றும் சமூக ஆதரவு போன்றவற்றிலிருந்து ஏற்படுகின்றது. மனவழுத்தம் என்பது வெறுமனே நம் உடல்/ மன சமநிலை சூழலை பாதிக்கின்றதோர் கிளர்ச்சிநிலையாகும். அது வாழ்க்கையில் எங்கும் நிறைந்திருக்கின்ற ஒரு பகுதியாக காணப்படுகின்றது. இது உடலியல் Cortisol மற்றும் அட்ரனலீன் (Adrenaline) போன்ற ஹோர்மோன்களை அதிகரிக்கச் செய்கின்றது. மனவழுத்தம் ஒரு சிறிய அழுத்தமாகவோ/ கடுமையான அழுத்தமாகவோ காணப்படலாம். எவ்வாறு இருப்பினும் இது எமது செயலில் எச்சரிக்கை தன்மையை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. ஆனால் நீண்டகால நாட்பட்ட மனஅழுத்தம் என்பது சுகாதார தீங்கை தரக்கூடிய விளைவுகளை கொண்டிருக்கமுடியும். எம்மால் உலகியல் அழுத்தங்களை கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். ஆனால் அவற்றினை கையாளக் கூடிய எதிர்வினை செயல்களை செய்ய முடியும்.

மனஅழுத்தமானது ஏதாவதொருவகையில் சவாலாகவோ அல்லது எமது நலனை அச்சுறுத்துவதாகவோ அமையும். சில அழுத்தங்கள் நாங்கள் வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டுமென்பதை விளக்குவதாக காணப்படுகின்றது. வாழ்க்கையில் எந்தவொரு மனஅழுத்தமும் இல்லாமல் பலமணி நேரத்திற்கு எம்மால் இருக்க முடியாது. அவ்வாறிருப்பது நம்வாழ்வில் சலிப்பு தன்மையை ஏற்படுத்துவதோடு எவ்விதமான பயனையும் உணரமுடியாமல் போய்விடுகின்ற சந்தர்ப்பமும் உண்டு. இவ்அழுத்தங்கள் மனம் மற்றும் உடலில் ஆரோக்கியம் குறைவதற்கும் காரணமாக அமைகின்றன. மனஅழுத்தம் என்பது மனிதன்/ விலங்கு/ உயிரினத்தில் உண்மையாகவோ/ கற்பனையாகவோ உடல் ரீதியாக/ உள ரீதியாக ஏற்படும் தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர்ச் செயலை செய்ய முடியாத நிலை தோன்றுவதன் மூலம் ஏற்படுகின்ற தொடர்




விளைவு/ பின்விளைவாகும். மேலும் ஒரு உயிர் சாதாரண நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்க முடியாதுள்ளபோது ஏற்படுகின்ற அசாதாரண சூழ்நிலையே மனஅழுத்தம் எனப்படுகின்றது. அத்தோடு எண்ணத்திற்கும், யதார்த்தத்திற்கும் உள்ள முரண்பாட்டுச் சூழலால் உடல், உள ரீதியில் குழப்பம் ஏற்படுகின்ற நிலையையே மனஅழுத்தம் என்று கூறுகின்றோம்.

### சமாளித்தல் திறன்

பிரச்சினைகளை எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுவருவதையே சமாளித்தல் திறன் என்கின்றோம். அதாவது பிரச்சினைகள் எவ்வாறு ஏற்படுகின்றதென அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளை வெற்றிகரமாகக் கண்டுபிடிப்பதாகும். இதன் விளைவாக மனப் பலவீனம் குறைகிறது. சமாளித்தல் திறன் மக்களுக்குப் பல அனுபவங்கள் தந்தாலும் அவர்களின் எதிர்பார்ப்பும், பயம், திறன்கள், நம்பிக்கை போன்றவைகள் மூலம் மனஅழுத்தத்தின் அளவைப்புரிந்துகொள்ளலாம். அத்தோடு அதை சமாளிப்பதும் எத்தகைய கடினம் என்பது புரிகிறது. மனஅழுத்தம் உடையோருக்கு

அனுபவம், வெற்றி போன்றவை தன்னம்பிக்கை, மற்றும் சிந்தனைத்திறனை வளர்க்க உதவுகிறது. இதனால் ஆளுமை வளர்கிறது. மேலும் இவர்கள் சமூக உறவுகளால் ஆதரிக்கப்படுகிறார்கள். ஒரு கடினமான வேலையைச்செய்யும் சூழ்நிலையில் பதட்டம், கோபம் ஏற்படுகிறது. எனவே சூழ்நிலை என்பது ஒருவனின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. உதாரணமாக ஒரு ஆணால் பல தைரியமான முடிவுகளை எடுக்கமுடியும். ஆனால் பெண்களால் அது முடிவதில்லை.




சமாளிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும்போது அந்த சூழ்நிலையில் ஏற்படும் நிகழ்வுகளை ஆராய்ந்து அறிதல் வேண்டும். அத்தோடு குறித்த நபரின் பலம், பலவீனத்தைப்புரிந்து கொள்வது அவசியம். ஏனெனில் உடலியல் அறிகுறிகளை எதிர்கொள்ள மறுத்தல் (Denial) என்ற சமாளித்தல் ஏற்படுகிறது. ஒருவர் தானாக புறக்கணிக்கலாம். அல்லது தவறாகப்புரிந்து கொள்ளலாம். இல்லையெனில் விழிப்புணர்வுடன் செயற்படலாம். மாரடைப்பு, நெஞ்சுவலி போன்றவை மறுத்தல் என்ற செயலினால் ஏற்படுகின்றது. ஏனெனில் நோயை ஏற்றுக் கொள்ளும் மனநிலை பலருக்கு இருப்பதில்லை. சிலர் எந்த நோயும் தனக்கு வராது என்ற அபரீத நம்பிக்கையில் இருக்கிறார்கள். இந்த உணர்வே பின்னர் பல மருத்துவ உதவிகளைப் பெற வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துகிறது.

இந்த மறுத்தல் என்ற திறன் மனநிலைப் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருக்கிறது. பலர் யதார்த்த நிலையை உணர மறுக்கிறார்கள். இதனால் திருப்தியற்ற நிலை உருவாகி சந்தோஷமில்லாமல் போய்விடுகிறது. உதாரணமாக வேலையை இழந்தவர்கள் தங்களுக்கு ஓய்வு வேண்டி விடுமுறையில் இருப்பதாக கூறிக்கொள்வர். சிலர் முதலாளி களைக் குறைகூறுவர்.

உயர்ந்த மனவழுத்தத்தை உடனடியாகக் காணமுடியாது. ஆனால் மனரீதியாகப்புரிந்து கொள்ளலாம். உதாரணமாக மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் தற்கொலை போன்ற விபரீதமான எண்ணங்களால் மாய்ந்து விடுகிறார்கள்.

### சமாளித்தல் முறை

சமாளித்தல் முறையில் மனிதர்கள் பல சொந்த சமயோசித உபாயங்களைத் தாண்டி பதிலைப்பெறுவர். மேலும்பல சமாளித்தல் முறைகளை பயன்படுத்தி வேறுபட்ட சிக்கலான சூழ்நிலையைச் சமாளிப்பர். அந்த வகையில் சில திறன்கள் பின்வருமாறு:

1. தகவல்களை அறிய முற்படும் திறன்.
2. மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு தேவைப்படும் போது ஆறுதல் கொள்ளும் திறன்.
3. சூழ்நிலையை மறுபடி விபரித்து தீர்வு காணும் திறன்.
4. விளைவுகளை ஆராய்ந்து மாற்று வழியைக் காணும் திறன்.
5. பிரச்சினையைத் தீர்க்க நகைச்சுவையைப் பயன்படுத்தி சூழ்நிலையை பலவீனமாக்கும் திறன்.

பிரச்சினைகளை வரும் முன் தடுப்பது தான் சிறந்தது. அல்லது இந்தப் பிரச்சினை வந்தால் இவ்வாறு சமாளிக்கலாம் என்று முன்கூட்டியே அறிந்து வைப்பது மனஅழுத்தத்தைக் குறைக்கும். உதாரணமாக ஒருவருக்கு அறுவைச்சிகிச்சை என்றால் அதன் விளைவு வலியைப்பற்றி முன்கூட்டியே சொல்லி சிகிச்சைக்கு தயார்படுத்தியிருந்தால் விரைவில் குணமடைந்து விடுவார். அவ்வாறு இல்லாமல் திடீரென்று நோயாளி பயந்து சிகிச்சைக்கு ஒத்துழைக்க வைப்பது கடினம். மேலும் அவர்கள் விரைவில் குணமடைவதில்லை என்று ஆராய்ச்சி கூறுகின்றது.

குறிப்பிட்ட சில திறமைகளைக் கற்றுக் கொண்டால் மனஅழுத்தம் நிறைந்த சூழ் நிலையையும் சமாளிக்கலாம். நிறைய பேர் எந்த பயிற்சியுமின்றி பயங்கரமான சூழ் நிலையில் நுழைவர். உதாரணமாக மலை ஏறுதல், மரமேறுதல், நீச்சல் அதேபோல பலபேர் தாண்டிச்சென்ற சுவடுகளைக் கையாளும் முறைகளை உற்று நோக்கினால் நாமும் அதேபோல தப்பித்துக் கொள்ளலாம். ஆனால்

அப்போதுகூட சில பேர் தோல்வியடைந்து விடுவர். அதற்குக் காரணம் அவர்களின் கிரகிக்கும் திறனின்மையாகும். அதாவது அவர்கள் எண்ணம் உணர்வு, நடத்தை போன்றவற்றை புரிந்துகொள்ளாதது தான். சிந்தித்து செயற்படுதல், அதிக கட்டுப்பாடு இல்லாமலும் இருத்தல் பின்னூட்டல் போன்ற சில பொதுவான திறன்களைக் கற்றுக் கொண்டாலும் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம்.

நடத்தை மூலம் சமாளிக்கும் யுத்திகள்

1. கடமையைச் செய்வது, எதிர்மறையான எண்ணங்களுக்கு இடம் தராமல் இருப்பது.
2. நாடகமாடாமல் நீங்கள் நீங்களாகவே இருப்பது. அவரவர் நம்பிக்கையின் மீது பற்று வைப்பது.
3. சுய புத்தியுடன் செயற்படுதல். மன எழுச்சிக்கான காரணத்தைக் கண்டறிந்து நீக்குதல்.
4. பலம், பலவீனத்தை அடையாளம் காணல். நிஜமான உணர்வோடு தமக்குத் தகுந்ததை அடைவது.
5. நகைச்சுவையாகப் பேசுதல். ஏனெனில் சிலநேரங்களில் சிரிப்பே மருந்தாக அமையும்.
6. ஒரு கட்டுப்பாடான வெளிப்பார்வை தேவை. நல்லவைகளை மட்டும் நினைக்க வேண்டும். அடுத்தவர்களது மனநிலையை பற்றி யோசிக்க வேண்டும்.
7. ஆதரவான உறவுகளை, நண்பர்களை நேசித்தல், அவர்களிடமிருந்து உதவி களைப் பெறல்.
8. பொறுமையாக இருப்பது அவசியம். தோல்விகளுக்குத் தண்டனை தரக்கூடாது. தவறுகளைப் பாடமாகக் கருத வேண்டும். சுயவிமர்சனம் கூடாது. அத்தோடு எதிர்பார்ப்பு அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**சமூக ஆதரவு**

நம்முடைய சமுதாயவலை என்பது நாம் மற்றவர் மீது சார்ந்து இருப்பது மற்றும் நம் மீது அக்கறை, அன்பு, மதிப்பு வைத்திருப் போரைத்தெரிந்து கொள்வதாகும். நாம் மற்றவர் களை நம்பி உறவாடும்போது ஆறுதல் ஏற்படும். எனவே சமூகவலையானது நமக்கு சமூக ஆதரவைத் தருகின்றது. தவறான நடத்தை, ஒத்துழையாமை போன்ற குணங் களைக் கொண்டோருக்கு சமூக ஆதரவு கிடைப்பதில்லை. அதேநேரம் பலவீனம் மற்றும் சமாளித்தல் இருக்கும் இடத்தில் சமூக ஆதரவு காணப்படுகிறது. மேலும் உடல் மற்றும் மனம் பலவீனமடையும்போது சமூக ஆதரவு அதிகமா கிறது. சமூக ஆதரவு என்பது மனஅழுத்தம் இருக்கும்போது மட்டுமல்லாமல், அமைதியாக இருக்கும்போதும் உதவுகிறது. புதிய அணுகு முறைகளை எதிர்கொள்ளும் போது பாதுகாப்பை யும், தன்னம்பிக்கையையும், புதிய சமாளிப்புத் திறன்களையும் சமூக ஆதரவு தருகிறது. ஒத்தமையாமை நடத்தை மற்றும் சிந்தனை பொதுவாகக் காணப்படினும் அத்தகையோருக்கு சமூகஆதரவும், குடும்பஆதரவும் கிடைப்பதில்லை. நல்ல குடும்பம் சுயநம்பிக்கை (Self Reliance) தன்னைத்தானே நம்பியிருத்தலை அதிகரிக்கும்.



தம்மைத்தாமே நம்புவதும், பிறரை நம்புவதும் நன்மையே தரும். மாற்றத்தை எதிர்கொள்ள சமூக ஆதரவு தேவை. குறைந்தளவு சமூக ஆதரவு பெறுவோர் மற்றவர்களை நம்ப மாட்டார்கள். சமூக ஆதரவு அதிகமாகப் பெறுவோர் எழுச்சியாகவும், சௌகரியமாகவும், திருப்தியாகவும், பாதுகாப்பாகவும் இருப்பர்.

மன அழுத்தத்தை எதிர்கொள்ள புதிய சிகிச்சை முறைகள் உருவாகிக் கொண்டே இருக்கிறது. உதாரணமாக Eye Movement Desensitization and Reprocessing (EMDR). எனவே பொறுமையும், சகிப்புத்தன்மையும், கற்றல் எண்ணமும் இருந்தால் மனஅழுத்தத்தை எளிதில் வெல்லலாம்.

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி ௦௨

**02.மரணராத்திரி**

கறுப்பு மை பூசிய
ஓவியத்தைப்போல
இருட்டிக்கிடக்கும் வீதியில்
அவனை அடையாளம்
காண முடியவில்லை!
நான்கு கால் பாய்ச்சலில்
வந்த குதிரை,
பிரதான வீதியில் சஞ்சரித்து,
சத்தமின்றி வந்து
அந்த சிற்றரண்மனை முன்,
நிறுத்தப்பட்டது!
அரண்மனை முன் அமைந்திருந்த
அரண்களில் இருந்து,
முண்டாசு போட்ட
நான்கு சிங்கள வீரர்கள்
வெளி வந்தனர்!
புரவியில் வந்தவன்
புவி மீது தாவினான்!
காவலர்கள் தடுத்தனர்!
அவன் அஞ்சவில்லை,
இடக்கை கொண்டு
தன் முக மறைப்பை விலக்கினான்!
மறித்தவர்கள் முதுகு மடக்கினர்!
முளந்தாளிட்டனர்! - இவன்
முன்னேறினான்!

என்ன விந்தை? - இந்த நேரத்தில்
இந்நாட்டு முதல் மந்திரி
ஆரிய சேனர் அரண்மனையில்
புகும்,
அதிகாரம் கொண்ட இவன் யார்?

நிலம் அதிர நடந்தான்
பாதம் தரையோடு பொருந்த
பாவம் திவலைகள்
சிதறி இறந்தன!
அடர் இருளில் முகம் தெரியவில்லை!
இதோ.. இதோ..
அரண்மனை வாசலண்டை
வந்துவிட்டான்!
அங்கு மங்கி எரிந்து கொண்டிருந்த தீச்சுடரில்
அவனை நன்றாக தெரிகிறது!

ஒரு பெரிய குன்றாகவும் தெரிகிறது!
விகாரைகள் போல்
விரிந்து அகன்ற மார்பு!
விரிசடை நனைந்து
கருநாகம் போல் திரண்டு
மார்பென்ற மலை மீது
படுத்துக்கிடந்தது!
இறுகிய வயிறு!
இடையில் இறுக்கிய
புலித்தோலாலான பட்டி!
முளந்தாள் வரை சீனப்பட்டு!
இடப்புறம் நீளவாள்,
இடையில் செருகிய குத்துவாள்!
இரத்தினபுரிக் கற்களால்
இணையற்ற ஹாரங்கள்!
இவன் நிச்சயம்
அரச வம்சத்தவன் தான்!

இதோ முகம்... முகம்!
இவனா? மன்னிக்கவும் இவரா?
இவர் யுவராஜா காசியப்பன் தானே!



இவரேன் இந்த நேரத்தில் இங்கு?
இலங்கை அரசியலில் சிக்கல்!
இராஜ குடும்பத்தில் விலகல்கள்!
இந்த நிலையில்
ஏதோ முக்கிய நிகழ்விற்கு,
முடிச்சுப்போடப்படப் போகிறது
என்பது
மட்டும் புலனாகிறது!
மழை மெல்ல மெல்ல பெருத்து,
காற்றுத்தோழனுடன் கை கோர்த்து,
ஓங்கிப் பொழியத் தொடங்குகிறது!
அவன் கண்கள் காரணமின்றி
சிவந்தன!
பற்கள் மோதியதில் அலகு
விரிந்தது!
கால்களிலும் கைகளிலும்
நரம்புகள் முறுக்கேறின!
திரண்ட கால்களால்
கதவுகளை ஓங்கி உதைந்தான்!
கதவுகள் சடாரென்று
திறந்து கொண்டன!
அவன் கண்களும் தான்!
கதவுகள் உடைந்த வேகத்தில்,
ஆரியசேனரின் தூக்கமும் உடைந்து கொண்டது!
தன் தலையணையின் கீழ் கிடந்த வாளினை
உருவியபடி அந்த அறையில் இருந்து வெளிப்பட்டார்!
ஆச்சரியப்பட்டார்! நெடுமூச்செறிந்தார்! ஆனால்
அஞ்சவில்லை!
இந்த நேரத்தில் இவ்வளவு அவசரமாக என்ன விடயம்...

அரசர் அழைத்து வரச்சொன்னாரா?
“இல்லை காலன் உன்னை அனுப்பி வைக்கச் சொன்னான்!’’

என்ன இளவரசே, மது அருந்தியுள்ளீரா?.... எனினும் வார்த்தைகள் வரம்பில் அடங்கட்டும்ய் கர்ஜித்தது கிழட்டுச் சிங்கம்!

உன் செயல்கள் வரம்பை மீறும் போது, என் வார்த்தைகள் வரம்பை மீறின் என்ன தவறு?
“என்ன...என் செயல்கள் வரம்பை மீறினவா?
தான் வாளின் பிடியை இறுகப் பற்றிக்கொண்டார்!

இன்னும் புரியவில்லையா ஆலோசனை சபையில் முகலனை மன்னனாக்க முடிவெடுக்கப்பட்டது!
அதற்கு முழு காரணமும் நீதான்!
“அதுதானே சட்டம் அதுதானே நியாயம்!”
“என்ன சட்டம்?.. மூத்தவன் நான் இருக்க முகலன் கோலோச்சுவதா? இதுவா ஆண்டாண்டு காலமாய் இந்த அரசர்குலம் கொண்ட சட்டம்? இதுவா நீ கற்பிக்கும் நியாயம்...?” விழிகள் சிவந்து, வலக்கரத்தின் விரல்கள் பிடியை தேடின...
“மூத்தவன் தாங்களாக இருந்தாலும் முறைப்படி.... அதாவது சட்டரீதியான அரசிக்கு மகனாகப் பிறந்தவர் முகலர் தானே...”
“ஏன் பட்டத்து அரசி மட்டும் தான் பெண்ணா? என் தாய் பெண்ணில்லையா...? சட்டங்களுக்காக மனிதர்களா? மனிதர்களுக்காக சட்டமா? உன்னை கொல்லப் போவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு! அரண்மனை எங்கும் நான் பாசத்துக்காக ஏங்கி அரவணைப்பின்றி அப்பனாலும், சிற்றன்னை என்ற அரக்கியாலும் ஒதுக்கப்பட்டு, சொல்லடி பட்டு சில வேளைகளில் பிரம்படி பட்டு தவித்த போதெல்லாம் என்னை அன்பாலே அள்ளி அணைத்து தாயைப்போல அமுதளித்த அத்தை என்ற தெய்வத்தை அணு அணுவாய் துடிக்கத் துடிக்க தீயிலிட்டு எரித்து மகிழ்ந்தவர்களில், நீயும் ஒருவன்!
இப்போது என்னிடம் பேசும் சட்டதிட்டங்களை ஏன் அன்று அரசவையில் உன் நா மறந்தது?
அரசுக்கு ஒரு சட்டம்... மக்களுக்கு ஒரு சட்டமா?
இல்லை இல்லை உன்னை உயிரழித்தே தீருவேன்!”
ஆரியசேனர் ஆடிப்போனார்!
பழைய நினைவுகள் அவர் முன் விஸ்வரூபம் எடுத்து ஆடின!
அதற்குள் காசியப்பன் தன் உடைவாளை உருவினான்!
நடு வானில் மின்னல் தெறித்தது!

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட அரிய சேனர் வாளும் கையுமாய் நின்ற காசியப்பனைப் பார்த்து புன்னகைத்தார்!
அந்தப் புன்னகை உதிர்வதற்குள், காசியப்பனின் வாள் பாய்ந்தது!
எனினும் அதை தடுத்து தள்ளி விட்டார்...!

மீண்டும் இருவர் வாள்களும் வேகமாகச் சுழன்று ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டன!
ஓங்கிப் பெய்த மழையினால் வாசலில் நின்ற காவலர்களுக்கு வாட்கள் மோதிய ஒலி கேட்கவே இல்லை!
தன்னிலை அடைந்த காசியப்பன் ஆரியசேனரின் கழுத்துக்குக் குறி வைத்தான்!
ஆனால் அதில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார் சேனர்! இப்போது சேனர் திடீரெனத் தன் வாளைச் சுழற்றி காசியப்பனின் கழுத்துக்கு குறி வைத்தார் மயிரிழையில் நழுவிக்கொண்டான் காசியப்பன்!
மீண்டும் இளசும் கிழடும் மோதின!
இருவரது வாள்களும் தங்களுக்குள் பலவாறு பேசிக் கொண்டன!

ஒன்றையொன்று மூர்க்கமாய் முத்தமிட்டன!
சிறிது நேரத்தில் எல்லாம் சேனர் களைத்துவிட்டார்!
பாவம் வயதாகி விட்டதல்லவா?
எனினும் காசியப்பனைச் சில வேளைகளில் நிலை தடுமாறவும் செய்தார்!
அவரின் வீரத்தை வியந்து கொண்டான் காசியப்பன்!
தன் திரண்ட காலால் எட்டி உதைத்தான்! அவர் நிலை தடுமாறி சுவரில் மோதினார்!
நிதானிக்கும் முன் காசியப்பனின் வாள் அவரது இதயத்தை தொட்டு விட்டது!
பொங்கிய குருதியை பொத்தியபடி துடித்த சேனரின் தலை மறுகணமே துண்டாடப்பட்டது!
ஐம்பத்தாறு வருடங்களாகப் பொழிந்து கொண்டிருந்த மழையும், சில நாழிகைகளுக்கு முன் தொடங்கிய மழை ஓய்ந்து போனது!



**மின்னல் தொடரும்...**

மருத்துவம் போற்றுதும்

சுஜன் சுகுமாரன்
3ஆம் வருடம், மருத்துவபீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்

# போதையின் விஞ்ஞானம்

பல ஆயிரம் வருடங்கள் முன், மரத்தில் இருந்து கீழ் விழுந்து அழுகிய பழங்களை சிம்பன்சிகள் உண்ட வேளை, சிம்பன்சிகளின் நடத்தையில் பல மாற்றங்கள் உண்டானதை மனிதன் நீண்ட காலமாக அவதானித்தான். இறுதியாக இதை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தான். பழங்கள் அழுகும் போது அவை மதுவம் எனப்படும் நுண்ணங்கியை கவரும். இந்த மதுவத்தின் தொழிற்பாட்டால் எதனோல் எனும் இரசாயனம் தோன்றும். அந்த எதனோலே சிம்பன்சியின் மாற்றத்துக்கு காரணம். எனவே இயற்கையாக உருவான இந்த எதனோலை ஆதிகால மனிதன் வீடுகளில் செயற்கையாக தயாரித்தான். மருத்துவத்திற்காய் ஒரு தேவையோடு அதை பயன்படுத்தினான். ஆனால் அடிமை ஆகவில்லை. இந்த எதனோல் தான் பல ஆயிரம் வருடம் களித்து இன்று, உலகின் மிகப்பெரிய போதையாக, மிகப்பெரிய அடிமையாக, அல்க்ககோலாக மாறும் என அவன் கனவிலும் நினைத்திருக்க வாய்ப்பில்லை அல்லவா. எதனோல் மட்டும் அல்ல. அதை விட சக்திவாய்ந்த போதைப் பொருட்கள் பிற்காலத்திலே உலகை அடிமையாக்க போகிறது என அறிந்திருக்கவும் வாய்ப்பில்லை அல்லவா.

ஒரு செயலை செய்தால் மிகப்பெரிய தீங்கு வருகிறது என தெரிந்தும் அந்த செயலை விட்டு எம்மால் வெளியே வர முடியாவிட்டால் அதை "அடிமை" என கூற முடியும். எனவே எங்கே இருக்கிறது பிரச்சனை?

போதைப்பொருள் அடிமை என்பது பலரும் நினைப்பது போல ஒருவருடைய ஒழுக்கத்தில் உள்ள குறைபாடோ, அவரின் இயலாமையோ அல்ல. அடிமை என்பது ஒரு வகையான, மூளையோடு தொடர்பான வருத்தம். (chronic brain disorder). இதன் பின் இருக்கும் விஞ்ஞானத்தை மிக சுருக்கமாக பார்க்க இருக்கிறது இந்த கட்டுரை......

ஒருவர் உயிர் வாழ்வதற்கு மூன்று விடயம் அவசியம். நீர், உணவு, மற்றும் டொபாமின் (dopamine). டொபாமின் என்பது எங்கள் மூளையின் தொளிற்பாட்டிற்கு தேவையான ஒரு இரசாயனம் (Neurotransmitters). இந்த டொபானினிற்கு எண்ணில் அடங்கா தொழிற்பாடுகள் இருப்பினும், அதில் ஒரு மூன்று விடயத்தை



குறிப்பிடுகிறேன். ஒன்று மகிழ்வான ஒரு உணர்வு. அதாவது நீங்கள் மது குடிக்கும் போதோ, உங்கள் காதலியை பார்க்கும் போதோ, பிடித்த உணவை உண்ணும் போதோ ஒரு மகிழ்வு வருகிறது அல்லவா? காரணம் யார்? இந்த டொபாமின். எப்படியாவது உயர்தரம் சித்தி அடைந்து விட வேண்டும் என சிலர் ஒரு இலக்கை நோக்கி பயணிப்பார்களே. (Motivation) எப்படி? டொபாமின் காரணம். அதை விட மூன்றாவது விடயம் தான் முக்கியம். நாங்கள் நீர் , உணவு அருந்தும் போது மூளையில் டொபாமின் சுரக்கப்படும். எனவே மீண்டும் மீண்டும் இந்த நீர், உணவை அருந்த, மீண்டும் மீண்டும் டொபானின் சுரக்கப் படுவதால், இந்த டொபாமினின் செயல்ப்பாட்டால், நீர், உணவு என்பன உயிர் வாழ்க்கைக்கு அவசியமானவை. அவற்றை எப்படியாவது எடுக்க வேண்டும் என மூளை ஒரு கட்டத்தில் உணரும். உணர்த்தியது யார்? டொபாமின்.

இப்பொழுது டொபாமின் எவ்வளவு முக்கியம் என அறிந்திருப்பீர்கள். ஆனால் ஒரு சாதாரண மனிதனுடைய அன்றாட வாழ்விலே நடக்கும் கவலையான விடயங்களிலும், மிக சந்தோசமான விடயங்களிலும் சரி, இந்த டொபாமின், ஒரு குறிப்பிட்ட அளவிலேதான் சுரக்கும். உதாரணமாக - மிக மிக மிக அதிகமான

சந்தோசமான நாள் என வையுங்கள். டொபாமின் 100ng/ 100ml குருதி. உங்களை துள்ளிக் குதிக்க வைக்கும். மிக கவலையான நாள் என வையுங்கள். டொபாமின் 40ng/ 100ml குருதி. உங்களை காலை படுக்கையில் இருந்து கூட எழும்ப தடுக்கும். “என்னமோ தெரியல மாப்பிள. ஏதோ ஒரு மாரியாவே இருக்குடா” எனப் புலம்ப வைக்கும்.



விடயங்களை கூட அவர்களால் அனுபவிக்க முடியாது. ஏன்? அவர்களிடம் தான் டொபாமின் வற்றி விட்டதே. கிட்டத்தட்ட 20ng/100mlக்கு வந்தி விடும் என்றல்லவா சொன்னேன்.

இப்போது என்ன பிரச்சனை. எப்படியாவது மூளைக்கு டொபாமின் வேண்டும். அவர்களிற்கு டொபாமின் வேண்டும் எனில் போதைப்பொருள் வேண்டும். எனவே அந்த

இப்போது விடயத்திற்கு வருவோம். முதன் முதலில் ஒரு சக்தி வாய்ந்த போதைப்பொருளை நீங்கள் எடுக்கும் பொளுது, அந்த போதைப் பொருள் மிக அதிகளவாக டொபாமினை சுரக்கும் எவ்வளவு தெரியுமா? கிட்டத்தட்ட 1000ng/100ml குருதி. கற்பனை பண்ணிப்பாருங்கள். இது கொடுக்கும் அந்த ஒருவகையான மகிழ்வான உணர்வு எப்படி இருக்கும் என்று. ஒரு இறக்கை மட்டும் இருந்தால் அவ்வளவு தான். செவ்வாய் கிரகத்தில் தான் தரை இறங்குவார்கள். எனவே இந்த மகிழ்வான உணர்வை மூளைக்கு இந்த போதைப்பொருட்கள் பழக்கப்படுத்தி விடுவதால் மூளை அதை விரும்பும் டொபாமினை அதிகளவாக சுரந்து சுரந்து எப்படியாவது அந்த போதையை ஏற்றிவிடு என நம்மை தூண்டிக்கொண்டே இருக்கும் அந்த தூண்டுதலின் விளைவாய், மீண்டும் மீண்டும் போதையை எடுக்க எடுக்க ஒரு கட்டத்திலே அதற்கு அடிமையாகிறார்கள். டொபாமின் அவர்களை அடிமையாக்கி விடுகிறது.


ஆனால் இப்போது பிரச்சனை என்னவெனில், மீண்டும் மீண்டும் இந்த போதைப்பொருட்களை உள்ளெடுக்கும் போது இந்த டொபாமின் உடைய அளவு, சுரப்பு குறையும். முதன் முதலில் போதைப்பொருளை எடுக்கும் போது 1000ng/100ml என இருந்த இதன் அளவு காலம் செல்ல செல்ல 800,700,600,100 என குறைந்து இறுதியாக, 20ng/100mlகு வந்து விடும் ஒருகணம் சிந்தித்து பாருங்கள். டொபாமின் 40ng/100ml என இருக்கும் போதே “என்னமோ தெரியல மாப்பிள்ள. ஒரு மாதியாவே இருக்குடா இண்டைக்கு” என யோசிக்க வைத்தால், போதைப்பொருட்களிற்கு அடிமையானவர்களின் வாழ்வில் ஒவ்வொரு நாளுமே அதே டயலொக் தான். வாழ்வில் மகிழ்வு இருக்காது. ஓர் இலக்கு இருக்காது. அவர்களின் வீட்டில் நடக்கும் நல்ல மகிழ்வான

போதைப்பொருளை பெற அவர்கள் என்னவும் செய்யத்துணிவார்கள். கொலை, களவு, கற்பளிப்பு என வாழ்க்கையே மாறிவிடும். இதற்கு யார் காரணம்? அவர்களின் மூளை. எனவேதான் நான் ஆரம்பத்திலே சொல்லி விட்டேன். போதைப்பொருள் அடிமை என்பது மருத்துவ ரீதியாக பார்த்தால் ஒரு வகையான மூளையில் ஏற்படும் வருத்தம். இந்த நோயை குணப்படுத்த முடியாது. ஆனால் சிகிச்சை மூலம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

இப்போது இறுதியாக உங்கள் மூளையைத் தொட்டு பதில் சொல்லுங்கள்? ஒரு நோயாளியை ஒதுக்கி வைத்தால் அவனின் நோய் மேலும் மேலும் அதிகரிக்குமே தவிர குறைவது சாத்தியமே இல்லை அல்லவா. ஆக ஒரு போதைப்பொருளிற்கு அடிமையான ஒருவனை நாம் அனுப்ப வேண்டிய இடம்,

***சிறைச்சாலையா? மருத்துவசாலையா?***






சசீந்திரராஜன் யஸ்மினி
Cel, பிரான்ஸ்




சசீந்திரராஜன் நோஸ்மினி
Cel, பிரான்ஸ்




செல்வி. திருமகள் கேதநாதன்
தரம் – 07
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

அன்பால் அகிலத்தை ஆள்வோம்.

அன்பென்ற மழையிலே அகிலங்கள் நனையுதே
அன்பான வழியது உயிர்நிலை – அன்பே சிவம்
அகில இயக்கத்தின் ஆதிமூலம்
அன்பால் அவனியை ஆள்வோமே...

கொடுக்கக் கொடுக்கக் கூடுவதல்லவா அன்பு
கொஞ்ச நாள் வாழும் இந்த வாழ்க்கைப் போராட்டத்தில்
கொண்டு செல்ல ஏதுமில்லை இந்த உலகிலே
தொடர்ந்து செய்வோம் உண்மையான அன்பை...

ச. இனியவன்
தரம் 05
திருகோணமலை

விடுகதைகள்

01. அங்கமெல்லாம் கண்ணுடையாள். அகப்பட்டவரை சிறைபிடிப்பாள். யார்?
02. இரா முழுதும் பூந்தோட்டம். விடிந்தால் வெறுந்தோட்டம். என்ன?
03. என்னை சத்தமாக அழைத்தால் காணாமல் போவேன். யார் நான்?
04. உடல் முழுதும் காற்று. ஆனால், சுவாசிக்க மாட்டான். யார் அவன்?
05. வானத்தில் பறக்கும் ஊரையே சுமக்கும். அது என்ன?

01. மீன்வலை
02. வானம்
03. மௌனம்
04. பலூன்
05. விமானம்




செ.கோவர்த்தனன்
தரம் 9A
யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி

உலக ஊடகங்களின் பெரும்பரப்பை ஆக்கிரமித்த கொரோனா வைரசின் வீரியம் சற்று குறைந்து வருவது ஆறுதலளிக்கிறது.ஆனாலும் இந்தியாவை நோக்கி பெரும் வெட்டுக்கிளி கூட்டம் படையெடுக்கிறது என்ற செய்தி பலரை நடுநடுங்க வைக்கிறது. ஏலவே வீட்டு முடக்கம் காரணமாக ஏராளமான நாடுகள் பொருளாதார வீழ்ச்சி நிலையை கண்டுள்ளது. தொடர்ந்து பஞ்சங்கள் ஏற்படலாம் என பொருளாதார வல்லுனர்கள் எச்சரித்துள்ளதுள்ளனர். இந்த வெட்டுக்கிளிகளினால் ஏற்படப்போகும் அழிவு ஏராளமான தாக்கங்களை ஏற்படுத்தப்போகின்றது. வெட்டுக்கிளிகளின் படையெடுப்பினால் உற்பத்திகள் அழிக்கப்பட போகின்றது. அண்மைக் காலங்களில் சோமாலியா, எதியோப்பியாவில் தான் வெட்டுக்கிளிகளால் பாரிய அளவு விவசாய நிலங்கள் சேதமாக்கமப்பட்டுள்ளது. பருவப்பெயர்ச்சி போல காலத்திற்கு காலம் இடம்பெயரும் இவற்றைக் கட்டுப்படுத்த வழி தெரியாமல் உற்பத்தியாளர்கள் தடுமாறி வருகின்றனர்.




.தமிழில் தோன்றிய கரிசல் காட்டு நாவல்களிலும் இந்த வெட்டுக்கிளிகளின் உடைய படையெடுப்பு அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ள தன்மையை காணலாம். கோபல்ல கிராமத்து மக்கள் நாவலை உதாரணமாக குறிப்பிடலாம். தமிழில் வெளிவந்த காப்பான் திரைப்படமும் இந்த விடயத்தை கருவாய் கொண்டது. வளமான விவசாய நிலங்களை கனிய வளங்களிற்காக கைப்பற்ற நினைக்கும் கும்பல் வெட்டுக்கிளிகளை வளர்த்து அவற்றை விவசாய நிலங்களில் விட்டு அதன் மூலம் பயிரழிப்புக்களை ஏற்படுத்துகின்றனர் நட்டமடைந்த விவசாயிகள். மனமுடைந்து தங்கள் நிலங்களை வழங்க வருவார்கள் என்பதே அக்கும்பலின் நோக்கமென திரைக்கதையை அமைத்து நகர்த்திச் செல்கிறார் இயக்குநர். நிற்க.

இந்த வெட்டுக்கிளிகள் அவற்றால் அழிவுகள் ஏற்படும் என்பது பற்றி சில சமய நூல்கள் பேசியிருக்கின்றன. பைப்பிளின் யாத்திராகமம் வெட்டுக்கிளிகள் தொடர்பில் பின்வரும் விடயங்களை குறிப்பிட்டுள்ளது.

1. நீ என் ஜனங்களைப் போகவிடமாட்டேன் என்பாயாகில், நான் நாளைக்கு உன் எல்லைகளுக்குள்ளே வெட்டுக்கிளிகளை வரப்பண்ணுவேன். (யாத்திராகமம்10:4)

2. உன் வீடுகளும் உன் ஊழியக் காரருடைய வீடுகளும் எகிப்தியரின் வீடுகளும் எல்லாம் அவைகளால் நிரம்பும் உன் பிதாக்களும் உன் பிதாக்களின் பிதாக்களும் தாங்கள் பூமியில் தோன்றிய நாள்முதல் இந்நாள்வரைக்கும் அப்படிப்பட்டவைகளைக் கண்டதில்லை என்று எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி, திரும்பிக்கொண்டு பார்வோனை விட்டுப் புறப்பட்டான். (யாத்திராகமம்10:6)

3. தரை காணாதபடிக்கு அவைகள் பூமியின் முகத்தை மூடி, கல் மழைக்குத்தப்பி மீதியாக வைக்கப்பட்டதைப் பட்சித்து, வெளியிலே துளிர்க்கிற செடிகளையெல்லாம் தின்றுபோடும். (யாத்திராகமம் 10:5)

இஸ்லாமியர்களின் புனித நூலாக குர்ஆனிலும் வெட்டுக்கிளிகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ஆகவே அவர்கள் மீது, கனமழையையும், வெட்டுக் கிளியையும், பேனையும், தவளைக ளையும், இரத்தத்தையும் தெளிவான அத்தாட்சிகளாக (ஒன்றன் பின் ஒன்றாக) அனுப்பி வைத்தோம். ஆனால் அவர்கள் பெருமை யடித்து குற்றம் புரியும் சமூகத்தாராகவே ஆகியிருந்தனர். (சூறா அல் அஃராப் - 133)

2. (தாழ்ந்து பணிந்து) கீழ்நோக்கிய பார்வையுடன், அவர்கள் புதை குழிகளிலிருந்து பரவிச் செல்லும் வெட்டுக்கிளிகளைப் போல் வெளியேறுவார்கள். (சூறா அல்கமர்-7)

இவ்வாறான செய்திகள் புனித நூல்களில் காணப்படுகின்றது. இந்த வெட்டுக்கிளிகளால் ஏற்படுத்தப்படும் அழிவுகளை மத நிலைகளில் நின்று நோக்க முற்படுவதையும் காணக்கூடியதாய் உள்ளது.

ஈழத்தைப் பொறுத்த வரையில் வெட்டுக்கிளிகள் பற்றி சில நம்பிக்கைகள் காணப்படுகிறது. பச்சை வெட்டுக் கிளிகளின் வரவு செல்வத்தின் வருகைக்கான அறிகுறி எனவும், பிதிர்களின் கடமைகளை சரிவர நிறைவேற்றா விட்டால் ஞாபகமூட்ட அவை வருவதாகவும் சிலர் கருதுவதுண்டு.

இந்த வெட்டுக்கிளிகள் மெக்சிக்கோ, சீனா போன்ற நாடுகளில் உணவாக உட்கொள்ளப்படுகின்றது. வீதியோர தள்ளுவண்டில்களில் இவை பொரிக்கப்பட்டு விற்கப்படுகின்ற புகைப்படங்களை வலைத்தளங்களில் காணமுடிகிறது. பூச்சி இனத்தை சேர்ந்த வெட்டுக்கிளிகள் நவீன விவசாய உலகத்திலும் பெரும் அச்சுறுத்தலுக்கு உரிய ஒன்றாக மாறி வருகின்றது.

விக்கி சாரங்கன்

பங்குச்சந்தை முதலீடு என்பதை சரியான முறையில் விளங்கிக்கொண்டால் அது வங்கியொன்றில் நிலையான வைப்பில் பணத்தை வைப்புசெய்வதை விட இலகுவான தொன்றாகும். சாதாரணமாக கூறினால் பாரிய கம்பனிகளின் உரிமையாளர்களில் ஒருவராக யாரும் மாறலாம் என்பதே இதன் பொருளாகும். மேலும் பங்குச்சந்தை முதலீட்டின் போது சிறப்பான தீர்மானங்களை மேற்கொண்டால் குறுகிய காலத்திலேயே அதிகளவான வருமானங்களை பெற்றுக்கொள்ளவும் முடியும். பங்கு முதலீட்டில் ஒரு வினைத்திறனான பயணத்தினை ஆரம்பிப்பதற்கு உங்களுக்கு உதவியளிக்க கூடியதாக இத்தொடர் அமையும். பங்கு முதலீட்டு உலகம் வழங்கக்கூடிய சாத்தியங்களை நீங்கள் மேலும் ஆராயக்கூடிய வகையில் ஓர் அடித் தளத்தை வழங்குவதே இதன் நோக்கம்.




### பங்கு

பங்கு எனப்படுவது பட்டியல்படுத்தப்பட்ட அல்லது பட்டியல் படுத்தப்படாத கம்பனி ஒன்றின் மூலதன அலகு ஒன்றைக் குறிக்கின்றது. இலங்கையில் பட்டியல் படுத்தப்பட்ட பொதுக் கம்பனிகள் (PLC ) மட்டுமே பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கி அதன் மூலம் மூலதனத்தை திரட்டிக்கொள்ள முடியும். மேலும் இவ் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் முதலீட்டாளர் தொடர்பான நட்டப்பொறுப்பானது வரையறுக்கப்பட்ட தாகவே காணப்படுகிறது. அதாவது நாம் முதலீடு செய்த பங்குகளைக்கொள்வனவு செய்த கம்பனியொன்று முற்றாக நட்டமடையுமாயின் நாம் முதலீடு ஏற்கெனவே முதலீடு செய்த தொகைக்கு அதாவது பங்குகளை கொள்வனவு செய்வதற்கென செலவிட்ட பணத்திற்கு மேலதிகமாக எந்த விதமான நட்டத்தையும் எதிர்நோக்க வேண்டியேற்படாது.

### பங்குகளில் முதலீடு செய்வதனால் கிடைக்கும் வருமானங்கள்

பங்குகளில் முதலீடு செய்வதனால் மூலதனலாபம் ,பங்குலாபம் என இருவகையான லாபங்களை ஈட்டிக் கொள்ள முடியும்.

மூலதன லாபம் - பங்குகளின் விலைகளானவை சந்தையில் காணப்படும் கேள்வி, நிரம்பல்களினாலும் செயற்திறன்,அரசியல் ,பொருளாதார காரணிகளாலும் பெருமளவில் தீர்மானிக்கப்படுகின்றது. எனவே இங்கு பங்குகளை கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க அதிகளவான விலைக்கு விற்பனை செய்வதனால் குறித்த பங்குதாரருக்கு கிடைக்கும் வருமானம் மூலதன லாபம் எனப்படுகின்றது.

உதாரணம் - ABC PLC கம்பெனியின் பங்கு ஒன்றை ரூபா 5 வீதம் 10,000 பங்குகளை 50,000 ரூபாவிற்கு பங்குதாரர் ஒருவர் கொள்வனவு செய்த பின்னர், பங்கு ஒன்றின் விலை யானது 8 ரூபாவாக அதிகரிக்குமாயின் ஒரு பங்கிற்கான மூலதன லாபமாக 3 ரூபாவும், மொத்தமாக 3x10,000= 30,000 ரூபாவை மூலதன லாபமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

பங்குலாபம் - கம்பனி யொன்றின் பங்குகளை வைத்திருப்பதற்காக பங்குதாரர் ஒருவருக்கு கம்பெனியினால் அதனது வருடாந்த இலாபத்திலிருந்து பகிர்ந்தளிக்கும் தொகை பங்குலாபம் எனப்படும். எனினும் இப்பங்கு லாபமாது கம்பெனிகளினால் கட்டாயமாக பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற அவசியமில்லை. அதே வேளை இவை நிலையான பெறுமதியில் செலுத்தப்பட வேண்டிய அவசியமும் இல்லை.அதாவது கடந்த வருட பங்குலாபத்தை விட இவ்வருடம் செலுத்தப்படும் பங்குலாபமானது அதிகரித்த தொகையாகவோ அல்லது குறைந்த தொகையாகவோ காணப்படலாம்.

K.ஹிருபிகன்
Accounting & Business, Dip.in HRM ,
ACCA-UK (Reading), BBM (Reading)

### பங்குச்சந்தையுடன் தொடர்பு பட்ட நிறுவனங்கள்

பங்குச்சந்தை செயற்பாட்டுடன் தொடர்புபட்ட நிறுவனங்களாக,

1) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு (Securities & Exchange Commission of Sri Lanka)



2) மத்திய வைப்பு திட்டம் (Central Depository Systems PVT LTD)
3) கொழும்பு பங்கு பரிவர்த்தனை (Colombo Stock Exchange)
4) பங்குதரகர் நிறுவனங்கள்(Stock Broker Firms) என்பன காணப்படுகின்றன.

## பங்குச் சந்தையின் வகைகள்

முதலாம்தர பங்குச்சந்தை - பங்குகளை முதன்முறையாக பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியொன்று ஆரம்ப பொது வழங்கல் (Initial Public Offering) செய்யும் போது குறித்த கம்பெனியிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்து கொள்வது இதுவாகும். இங்கு குறித்த ஆரம்ப பொது வழங்கலை குறித்த கம்பனி மேற்கொள்ளும் போது முதலீட்டாளர்களுக்கான விளம்பரப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

இரண்டாம்தர பங்குச்சந்தை - ஏற்கெனவே பங்குகளை கொள்வனவு செய்து வைத்திருக்கும் தனி நபர்களோ வேறு நிறுவனங்களிடமிருந்தோ பங்குகளை சந்தையில் கொள்வனவு செய்தலை இது குறிக்கிறது.இங்கு குறித்த விற்பனையாளர் தனது பணத்தேவைக்காகவோ, மூலதன லாபத்தை எதிர்பார்த்தோ, வேறு கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காகவோ குறித்த விற்பனைச் செயற்பாட்டில் ஈடுபடலாம்.

## பங்குசந்தையின் வியாபார நேரம்

பங்குசந்தை நடவடிக்கைகளை விடுமுறை நாட்கள் தவிர்ந்த திங்கள் முதல் வெள்ளி வரையான நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 2.30 மணி வரை மேற்கொள்ள முடியும். (தற்போதைய சூழ்நிலை காரணமாக இந்த நேரங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.)




## பங்குசந்தையில் காணப்படும் பங்குகளின் வகைகள்

இலங்கையின் பங்குசந்தையைப் பொறுத்தவரையில் வாக்குரிமையற்ற சாதாரண பங்குகள் (Non Voting Ordinary Shares) ,வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகள் (Voting Ordinary Shares) எனும் இரு வகையான பங்குகள் காணப்படுகின்றன. இங்கு வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர் ஒருவரினால் கம்பெனி தொடர்பான தீர்மானங்களில் ஆதரவாகவோ, எதிராகவோ வாக்களிக்க முடியும். மாறாக வாக்குரிமையற்ற சாதாரண பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரருக்கு வாக்களிக்கும் உரிமை யானது வழங்கப்பட மாட்டாது. எனினும் கம்பனிகள் வாக்குரிமையுள்ள சாதாரண பங்குகளை வழங்குவது கட்டாயமானதாக காணப்படினும் வாக்குரிமையற்ற சாதாரண பங்குகளை வழங்குதா இல்லையா என்பது கம்பெனியின் தீர்மானமாகவே அமையும்.

தொடரும்...



பங்குசந்தை என்பது மிக சாதாரணமான முதலீட்டு வழியொன்று என்பதைப் பலரும் விளங்கிக்கொள்வதில்லை. எனவே குறித்த விடயம் தொடர்பான மிக இலகுபடுத்தப்பட்ட தொகுப்பு ஒன்றை தொடராக எழுத தீர்மானித்துள்ளேன். இங்கு பதிவிடப்பட்ட விடயப்பரப்பினுள் ஏற்படும் கேள்விகளை / சந்தேகங்களை thumi2016@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் . அனுப்பப்படும் வினாக்களுக்கான பதில் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.



முட்டாமல் முடங்குவீரென
தப்பட்டம் அடித்ததனால்
தம்பாடு கெட்டோர்க்கு
பெரும்பாடு பட்டோர்க்கு
ஆயிரங்கள் ஐந்து
படியளந்த பின்னே
ஒரு விடியல் கடந்ததுமே

ஒட்டாமல் இருப்பதுதான்
என்ன விந்தை!!!

-வறியோன்-

பத்து தளங்களைக் கொண்ட கண்ணாடிகளால் மின்னும் அந்தக்கட்டடத்தின் முன்னால் சென்று ஆதித்யனின் கார் நின்றதுமே அவனுக்காக காத்துக்கொண்டு இருந்த பிரதீப் ஓடி வந்தான். கட்டட நுழைவாயிலில் நின்ற காவலாளி இயல்பாக வணக்கமொன்றை வைக்க அவருக்கு தலையசைத்தவாறே தானியங்கி கதவின் ஊடாக கட்டிடத்தினுள் நுழைந்த ஆதித்யனின் நடை தன்னை நோக்கி வந்த நண்பனைக் கண்டு விட்டு ஒரு நிமிடம் வேகம் குறைந்தது. அவனது வேகநடைக்கு ஈடாக அவன் பின்னால் ஒரு அடி இடைவெளியில் இயல்பாக நடந்து வந்த ஆராதனாவும் அவனின் எண்ணம் புரிந்தது போல தயங்கி நின்றாள்.




நண்பன் தன்னுடன் இணைந்து கொண்டதும் மீண்டும் நடையின் வேகத்தைக் கூட்டியவன் மின் தூக்கியில் நுழைந்த பின்னர் தன் பின்னாலே உள் நுழைந்த பிரதீப்பை நோக்கி திரும்பி "என்ன நடந்தது பிரதீப்? இது போல நடக்கிறது இது தான் முதல் தடவை" என்று அழுத்தமாக கேட்டான். அவனின் அழுத்தமான கேள்வியிலே தனக்கு ஒரு குட்டு இருப்பதை உணர்ந்தவன் போல ஒரு நிமிடம் தலையை குனிந்த பிரதீப் "சாரி ஆதி. எங்க பிழை நடந்திச்சு என்டே தெரியல! விசாரிச்சுட்டு தான் இருக்கோம். பட் நம்ம எப்படி இதை சமாளிக்கப்போறோம் என்டு தான் பயமா இருக்கு" என்று கவலையாக இழுத்தான். அவனைப்பற்றி நன்கு அறிந்தவன் ஆதி! கம்பனி என்று வரும் போது ஆதியை விட அக்கறையாக இருப்பவன். ஆனால், இப்போது முளைத்துள்ள பிரச்சனையின் அடியை பிடிக்காவிடில் எதிர்காலத்தில் தனது கம்பனிக்கு ஆபத்து வரும் என்பது மட்டும் ஆதிக்கும் நன்கு விளங்கியது. நண்பனை நோக்கி திரும்பியவன் "ரைட்! காலைல இருக்கிற மீட்டிங் ல பேசலாம்" என்று கூறிவிட்டு பத்தாவது தளத்தில் அமைந்திருந்த அவனது அறையினுள் சென்று மறைந்தான்.

ஆதி முன் செல்ல அவனின் பின்னாலேயே செல்ல எத்தனித்த ஆராதனாவை அழைத்த பிரதீப், "ஆராதனா! மீட்டிங் கு மார்க்கெட்டிங் டீமையும் இன்வைட் செய்ங்க. நான் சொன்னதா ஆதிட்ட சொல்லிடுங்க" எனவும் புன்னகையுடன் "யெஸ் சார்" என்றவள் அவன் மேலும் ஏதோ தயங்கி தயங்கி சொல்ல வருவதை கணக்கில் எடுக்காமலே சென்றாள். அவள் சென்ற திசையைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டவன் "அவனை போலவே ஒரு செக்ரட்டரியை எடுத்து வைச்சு இருக்கான் பாவி! ஒரு மனுசன் என்ன சொல்ல வாறான் என்று சரி கேட்குறானுகளா? இந்த பைத்தியக்கார கூட்டத்துக்குள்ள போய் என்னைப் போல திறமை சாலியை மாட்ட வைச்சுட்டியே கடவுளே" என்று தனக்குள் முனகியவாறே அவனது அறையை நோக்கி சென்றான்.


ஆதி மற்றும் பிரதீப்பின் அலுவலக பகுதிகளே ஒரு தனி குட்டி வேலைத்தளங்களாக இருக்கும். ஆதியின் பகுதியில் அவனது அறையின் வெளியில் எதிரில் ஆராதனாவிற்கான பகுதி ஆதியின் அறைக்குள் நுழைபவர்கள் அவளைக் கடந்து செல்வதற்கு ஏற்றால் போல அமைக்கப்பட்டு இருக்கும். இருவரினதும் பகுதியை விட்டு வெளியே சென்றால் முகாமைத்துவ அலுவலர்கள் ஐவருக்கான அறை இருக்கும். அதையும் கடந்து தான் ஆதியைக் காண வருவோர் செல்ல வேண்டும். இந்த பகுதி அந்த அலுவலகத்தின் இதயம் எனலாம். ஆராதனா முதற்கொண்டு அங்கு இருப்பவர்கள் அனைவருமே வேலையில் கைதேர்ந்தவர்கள். அனைவருமே ஆதியின் தெரிவு தான்.

பிரதீப்பின் அலுவலக பகுதியில் அவனுக்கானதும் அவனது காரியதரிசிக்கானதுமான அறைகள் அமைந்து இருக்கும். பிரதீப் உள்ளே நுழைந்து அவனது கதிரையின் சாய்ந்தது தான் தாமதம் அவனது காரியதரிசி ஷீலா ஓடி வந்து அவனின் முன்னால் மூச்சு வாங்க நின்றாள். அவள் ஓடி வந்ததுமே திடுக்கிட்டவன் ஷீலாவைக் கண்டதுமே "அடுத்த தொல்லை" என்று முணுமுணுத்தபடி ஈஈஈ என்று சிரித்தவன் "என்னாச்சு ஷீலா?" என்று கேட்டான். அவனுக்கு தெரியும். அவனது காரியதரிசி ஒரு நாள் ஒரு தவறாவது செய்து விடுவாள். இல்லாவிடில் இவளுக்கு தூக்கமே வராதா என்று அவனே யோசித்து இருக்கிறான், இப்பொழுதும் அதனை தெளிவாக தெரிந்து கொண்டு தான் கேட்டான்.

"சார்! ஷாஷா கம்பனி முதலாளிக்கு அனுப்ப வேண்டிய பூங்கொத்தை ஷாய் டெவலப்பர்ஸ்கு அனுப்பிட்டேன் சார்" என்று கூறி தலையை

சொறியவும் நெஞ்சை பிடித்தபடி "என்னது???" என்று கதிரையில் சாய்ந்தே விட்டான். அவள் பூங்கொத்து அனுப்பியது அவர்களது மென்பொருளைப்போன்ற ஒன்றை வெளியிட்டவர்களுக்கு. இது மட்டும் ஆதிக்கு தெரிந்தால் "செத்தேன்" என்று தலையில் அடித்துக்கொண்டான்.

அதைப் பார்த்து பதறிய அவனது காரியதரிசி "சார் நான் வேணா திரும்ப எடுத்துட்டு வரட்டுமா?" என்று கேட்கவும் நெஞ்சு வெடித்து விட்டதோ என்று பயந்தே போய் நெஞ்சை தேய்த்து விட்டவன் "நம்ம கம்பனி மானத்தை வாங்காம விடவே மாட்டியா? யம்மா ஷீலா. நீங்க இன்டைக்கு செய்த ஒரு காரியமே எனக்கு போதும். எதுவுமே பண்ணிடாதமா. போ போ" என்று அலுத்துக் கொண்டவன் நேரமாவதை உணர்ந்து மீட்டிங்க் அறைக்கு விரைந்தான்.



மீட்டிங்க் அறையில் அனைவரும் குழுமிய பின்னர் ஆராதனா பின் தொடர உள்ளே நுழைந்த ஆதியின் கண்கள் அங்கிருந்த அனைவரையும் படமெடுத்துக்கொண்டது. அவனது கதிரையில் அமர்ந்து சற்று சாய்ந்து ஆடியவாறே மீண்டும் அனைவரையும் பார்வை யிட்டவன் "வெல்! யாரு வரல இன்னும்?" என்று கேட்கவும் ஒவ்வொருவரும் ஹாலில் இருந்த அனைவரையும் ஒருமுறை பார்த்தவாறு யார் வரவில்லை என்று அனுமானிக்க முயன்று கொண்டிருந்தனர். பதில் வராததால் ஆராதனாவை ஆதி நோக்கவும் "டெவலப்மென்ட் டீமில இருந்து மகேஷ் வரல போல இருக்கு சார்" என்று அவன் எதிர்பார்த்த பதிலை கூறவும் ஆதியின் விழிகள் டெவலப்மன்ட் டீம் லீடரை அழுத்தமாக பார்வையிட்டது.

அதிலேயே குளிரெடுக்க "இல்ல சார். இன்ஃபர்ம் பண்ணிட்டோம் சார்" என்று இழுக்கத் தொடங்கினான்.

அங்கிருந்த அனைவருமே ஆதியை விட வயதில் மூத்தவர்கள். சிறுவயதிலேயே லண்டன் சென்று மேற்படிப்பையும் முடித்து விட்டு திரும்பியவன் பொறுப்பேற்றது ஆராதனா அந்த அலுவலகத்தில் சேருவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் தான்.

ஒரு பெருமூச்சுடன் அவரைக் கை காட்டி தடுத்தவன் "டெவலப்மன்ட் டீம் ல இருக்கிற வங்களுக்கு மீட்டிங்க் என்று யாரும் இன்ஃபர்ம் பண்ணத்தேவை இல்லை சார். அதுக்கு ஒரு சாஃப்ட்வெயாரை தயாரிச்சு வெளியிட்டதே நீங்க தானே?" என்று உறுமலாக கூறியவன்
"ஆராதனா!!"
"யெஸ் சார்"
"டிஸ்மிஸ் தட் மகேஷ். அவன் எங்க தகவல் குடுத்தானோ அங்கயே போய் சேர சொல்லுங்க" என்று கூறவும் அங்கிருந்த அனைவருமே அதிர்ந்து போய் அவனை பார்வையிட்டனர். ஆனால் அவன் எதையும் காரணமின்றி செய்ய மாட்டான் என்று உணர்ந்தவளாக புன்னகை முகத்துடனே கூறினாள் "யெஸ் சார்" ஐ அவனது காரியதரிசி ஆராதனா!

சஹானா




பெண், இந்த உலகத்தின் ஒட்டுமொத்த இயக்கத்தின் ஆதாரம். இயற்கையும் ஒரு இளைய கன்னி தான். அவளின் ஒட்டுமொத்த அழகும் அவள் உடுத்திய பச்சை சேலையினுள் அடக்கம். வானை பார்த்து நிமிர்ந்து நிற்கும் மார்பகங்களென மலைகள். அவளின் சில்லிடும் தேகத்தை எப்பொழுதும் குளிர்மையாக பேண நெளிந்து வளைந்து நெய்யப்பட்ட ஆறுகள், குளங்கள், சமுத்திரங்கள். "கவி பாட தமிழ் இல்லாத" தொப்பிளை தாங்கிய படி இருக்கும் அழகான பாலைநிலமாக குறுக்கு. மினுங்கும் மெல்லிய உரோமம் போல, துமி மழையில் துளிர்த்த புற்களை கொண்ட வயல்கள். சில இருண்ட மர்ம மன்மத காடுகள்.

தீண்ட, மூடி வைத்த முகைகள் எல்லாம் சிலிர்த்து வெடிக்கும். நாணி நின்ற இதழ்கள் எல்லாம் சிலிர்த்து சிரிக்கும். அந்த குறுநகை அமைதியான இரவினிலே வளியை வருடிச் செல்லும்.

"பூப்பூக்கும் ஓசை அதை கேட்கத்தான் ஆசை"

தான் தேக்கி வைத்த நறுமணத்தை காற்றுக்கு வார்த்து காற்றை கண நேரம் கிறங்கடிக்கும். தன்னுள் ஊற்றெடுத்த ஒளியை இந்த உலகுக்கு பாய்ச்சும். வெள்ளி நிலவுக்கு போட்டியாக மின்மினிகள் விளக்கேற்றிக் கொண்டிருக்கும் அந்த இரவில், மலர்கள் மலர சிரிப்பு, நறுமணம், புதியதொரு மின்னல் கீற்றாக வெளிச்சம் என அத்தனையும் சேர்ந்து இந்த பூமியை மகிழ்ச்சியின் உச்சம் புரியாது தத்தளிக்கச் செய்யும்.

இ.தனிஷ்ரன்

# சஹாரா பூக்கள் பூத்ததோ...

இக்கன்னியின் வாழ்வில் மிகமிக சந்தோஷமான நாட்கள் அவள் பூக்கும் நாட்கள். அவள் பூப்படையும் நாட்கள். பச்சையின் மேல் சிந்தி விட்ட வர்ணமாக நீலம், சிவப்பு, வெள்ளை, மஞ்சள், ஊதா, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் என பூக்கள் பூத்து குலுங்கும் போது, அந்த கன்னிக்குள் சந்தோஷ அலை கரை புரண்டு ஓடும். மகிழ்ச்சி வெள்ளத்திலே அவள் பூரிக்கும் அவளது பூப்பு.

இவள் பூத்துவிட்டாள் என்றால், அவள் வண்ணாத்துப்பூச்சிகளுடன் கலவி செய்வதற்கு தயாராகி விட்டாள். மகரந்தத்தை பெற்றுக் கொண்டால் கருத்தரிப்பாள். தாய்மை அடைவாள். காய்ப்பாள். கனிவாள். வாரிசுகளை பெருக்குவாள். பரம்பரை சிறக்கவும் பூமி செழிக்கவும் இவள் பூக்க வேண்டும்.

பிரபஞ்சமே சந்தோஷ அலையில் நீந்தும் அந்த நொடி,

பூக்கள் பூக்கும் தருணம்.

உலகம் உறங்கிய பின்பு, அமைதியான அந்த இரவினில் தான் பல இளைய கன்னிகள் பூக்கிறார்கள். சிலர் பொன்மாலை மயங்கவும் மொட்டு விரிப்பதுண்டு. தென்றல் வந்து மெல்லத்

"பூக்கள் பூக்கும் தருணம் ஆருயிரே பார்த்ததாரும் இல்லையே"

உலகத்தவருக்கே கிடைக்காத வரம், பூ பூப்பதை பார்ப்பது. அது கொடுக்கும் மகிழ்ச்சியில் திளைப்பது. அதே சந்தோஷ அருவி சிந்தும் பன்னீர் தூவலை, இவளை கண்ட கணத்தில் இவன் உணர்கிறான். காதல் கசிகிறது.

"நேற்று வரை நேரம் போகவில்லையே உனதருகே நேரம் போதவில்லையே"

காதலியை பிரிந்தால், நேரம் இயங்க மறுப்பதாயும் காதலி கூடவே இருந்தால், நேரம் அதிவேகத்தில் இறக்கை கட்டி பறப்பதாயும் காதலன் உணர்கிறான்.

"காத்திருந்தால் எதிர்பார்த்திருந்தால் ஒரு நிமிசமும் வருசமடி"

நேரம் நிலையானது என்பதே இருபதாம் நூற்றாண்டு வரை விஞ்ஞானத்தின் நம்பிக்கை. ஐன்ஸ்டீன் சார்பு நிலைக் கோட்பாட்டோடு வந்தார். நேரம் இயக்கவியலுக்கு உரியது என்றார். நேரத்தை சுருக்கலாம் நேரத்தை நீட்டலாம் என்றார். இன்னும் சொன்னால், "நேரம் என்ற ஒன்றே இல்லை" என்றார்.



"நேரம் என்பது மாயை" என ஜன்ஸ்டீனுக்கு முன்னரே காதலர்கள் கண்டறிந்து விட்டார்கள்.

"இரவும் விடியவில்லையே
அது விடிந்தால்
பகலும் முடியவில்லையே"

கெப்ளரின் ஒரு விதி இருக்கிறது. சூரியனுக்கு அண்மையில் செல்லும் போது கோள்கள் விரைவாக நகர்கிறது. சூரியனில் இருந்து விலகி செல்லும் போது கோள்கள் மெதுவாக நகர்கிறது.

"நிமிசங்கள் ஒவ்வொன்றும் வருசங்கள்
ஆகும் நீ என்னை நீங்கி சென்றாலே
வருசங்கள் ஒவ்வொன்றும் நிமிசங்கள்
ஆகும் நீ எந்தன் பக்கம் வந்தாலே..."

காதலி சூரியன். அவளை சுற்றி வரும் பக்தனாக காதலன். நேரம் நிலையற்றது என்பதை கண்டு பிடித்த விஞ்ஞானி. கடவுளையே கண்ட மெஞ்ஞானி. சிலருக்கோ காதலி கருந்துளை. மூழ்கியே விடுவார்கள். அங்கு நேரம் என்பதே இல்லை. நேரம் மறைகிறது.

"வார்த்தை தேவையில்லை வாழும் காலம் வரை
பாவை பார்வை மொழி பேசுமே"

காதலி பேசினால், கிளிப்பேச்சு. மழலையின் கொஞ்சல். தேன் சிந்தும் வார்த்தைகள். சில்வண்டின் ரீங்காரம். வார்த்தைகளே வேண்டாமே! கண் பேசும் வார்த்தைகளே போதும் வாழும் காலம் வரை நான் வாழ.

"வேர் இன்றி விதை இன்றி
விண் தூவும் மழை இன்றி
இது என்ன இவன் தோட்டம் பூ பூக்குதே
வாள் இன்றி போர் இன்றி
வலிக்கின்ற யுத்தம் இன்றி
இது என்ன இவனுக்குள் எனை வெல்லுதே
இதயம் முழுதும் இருக்கும் இந்த
தயக்கம் எங்கு கொண்டு நிறுத்தும்"

விதை போடாது முளைத்த சுயம்புச்செடி. வேரில்லாத விநோதமான செடி. மழை நீர் வேண்டாத கைலாச விருட்சத்தின் குழந்தை. அதிலே கோடான கோடி மலர்கள் பூக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வர்ணம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாசனை. மனதுக்குள்ளே மத்தாப்பூ. அந்த தோட்டத்தில் இருந்து எழுந்த சுகந்தத்தை நுகர்ந்தே, இவள் இதயம் இவனிடம் தஞ்சம் அடைந்து விட்டது. வாள் இல்லை. போர் இல்லை. யுத்தம் இல்லை. ரத்தம் இல்லை. வெற்றி இல்லை. யாருக்கும் தோல்வியுமில்லை. அனுபவம் புதுமை. விடை தெரியா வினா. புரியாத புதிர்.



"இதை அறிய எங்கு
கிடைக்கும் விளக்கம்
அது கிடைத்தால் சொல்ல
வேண்டும் எனக்கும்"

விளக்கம் வேண்டுமா? வினாக்களை உருவாக்கு! வினாக்களே விடை. இங்கே, விடை தரும் வினாக்கள் தான் விடை தெரியாத வினாக்கள். மயக்கம் பிறக்கிறது.

"எந்த மேகமிது எந்தன் வாசல் வந்து
எங்கும் ஈர மழைத் தூவுதே
என்ன உறவு இது எதுவும் புரியவில்லை
என்ற போதும் இது மீளுதே
யார் என்று அறியாமல் பேர்கூட தெரியாமல்
இவனோடு ஒரு
சொந்தம்
உருவானதேன்
ஏனென்று கேட்காமல்
தடுத்தாலும் நிற்காமல்
இவன் போகும் வழி
எங்கும் மனம் போகுதே"



அவள் கோவில் சிற்பம். நான் அவளுக்கு படைத்ததில் சிந்திய

பொங்கல் பருக்கைகளை பொறுக்கி உண்ணும் சிற்றெறும்பு. அவளை அபிஷேகிக்கையில் சிந்தும் தூவானம் என்னையும் நனைத்திருக்கிறது. ஆனால், இப்பொழுது அவள் பார்த்தாலே அதே தூவானம் என்னை ஈரமாக்குகிறதே! இது உணர்வுள்ள சிற்பம். சிற்றெறும்பின் மேல் ஈர்ப்பு உள்ள சிற்பம். சிற்றெறும்பின் பெயர் தெரியாது. யார் இந்த சிற்றெறும்பென்றும் தெரியாது. ஆனாலும் எந்த சிந்தையுமின்றி, சிற்பத்துக்கு சிற்றெறும் போடு ஊர்வலம் போக ஆசையாக இருக்கிறது. என்ன இது? என்ன உறவு?

"பாதை முடிந்த பிறகும்
இந்த உலகில் பயணம் முடிவதில்லையே"

வரலாறு இருக்கிறதே வாழ்ந்த கதை சொல்ல! செயல்கள் இருக்கிறதே பெயர் சொல்ல. அதிர்வு.

"காற்றில் பறந்தே பறவை மறைந்த பிறகும்
இலை தொடங்கும் நடனம் முடிவதில்லையே"

உலகம் புதிதாகியது.

நேற்று வரை நேரம் போகவில்லையே
உனதருகே நேரம் போதவில்லையே
எதுவும் பேசவில்லையே இன்று ஏனோ
எதுவும் தோன்றவில்லையே!

என்ன புதுமை!

காதல்!



# முன்மாதிரியான பிறந்தநாள்



கனடாவில் வதியும் திரு. திருமதி. ஜெயா தவச்சந்திரன் அவர்களுடைய மகன் அஸ்வினின் 12ஆவது பிறந்தநாளை முன்னிட்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாற்றுப்பாலினக் குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார உதவியாக இரண்டு அடுக்குகளைக் கொண்ட கோழிக்கூடும், கோழிகளும் தூமி அமைப்பினூடாக வழங்கப்பட்டது. குறித்த பயனாளிகளை யாழ் திருநர் வலையமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஏஞ்சல் குயின்ரஸ் அடையாளப்படுத்தியிருந்தார்.

இம்முன்மாதிரியான பிறந்தநாள் நிகழ்வை முன்னெடுத்த பெற்றோரை வாழ்த்துவதுடன், அஸ்வினுக்கு தூமி சார்பான பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

***தமிழ் போல் வாழ்க பல்லாண்டு!!!***

**தாமின் புறுவது உலகில் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.**



# விலங்கின மருத்துவ அனுபவம்



மரு. உமாபரன் டி.வி.எம்
மலேசியா

விலங்குகளின் ஆரோக்கியத்தையும் நலனையும் பேணுவதை தலையாயக் கடமையாகக் கொண்டவர் கால்நடை மருத்துவர். மனிதர்களைப் போல் தங்கள் வலியை வாயைத் திறந்து சொல்லவோ, தங்களுக்கு ஏற்படும் அநீதிகளை முறையிடவோ இயலாதவை விலங்குகள். அவற்றின் பாதுகாவலாராக விளங்குபவரும் கால்நடை மருத்துவரே. விலங்குகளின் நோயை கண்டறிவது, நோயின் தாக்கம் பரவாமல் கட்டுப்படுத்துவது, நோயுற்ற அல்லது காயப்பட்ட விலங்குகளுக்கு மருத்துவத்தோடு சேர்த்து ஆறுதல் கலந்த சௌகரியம் அளிப்பது, நோய் மனிதர்கள் அல்லது மற்ற விலங்கினங் களுக்கு பரவாமல் தடுப்பது, வளர்ப்பு பிராணிகள் மற்றும் பண்ணை விலங்குகளின் பராமரிப்பு முறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குவது, கால்நடை மருத்துவம் சார்ந்த ஆய்வுகளில் ஈடுபடுவது, காட்டுயிர்களைப் பேணுவது என இந்த படிப்பின் வீச்சு மிகவும் பரவலானது.

கல்வி கேள்விகளில் தனிச்சிறந்த தேர்ச்சியைக் கொண்டிருப்பதைத் தவிர விலங்குளின் மீது பரிவும், அவை மனிதர்களைவிட தாழ்ந்தவை அல்ல என்ற உன்னத எண்ணமும் இத்துறையில் நுழைவதற்கான முக்கிய முன்தேவையாகும். ஒரு கால்நடை மருத்துவராக, ஒருவர் கால்நடை மருத்துவ டாக்டர் பட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றிட வேண்டும். பொது மற்றும் பல் மருத்துவ கல்விகளுக்கு இணையாக ஐந்திலிருந்து ஆறாண்டுகள் மருத்துவத்தின் பல்வேறு கூறுகளைக் கற்றுத்தேர்ந்து, அதன் இறுதி ஆண்டில் எழுத்து தேர்வு தவிர, வாய்மொழித் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வுகளில் வெற்றி பெற்று ஆற்றலை நிரூபித்த பிறகே டாக்டர் பட்டம் சூட்டப்படும்.

கால்நடை மருத்துவ அறிவியல் ஏராளமான வகைகளில் வேலை வாய்ப்பினை வழங்குகிறது. கால்நடை மருத்துவர்களின் தேவை கடந்த பத்தாண்டுகளில் கணிசமாக அதிகரித்துள்ளது. இத்துறையின் சிறந்த எதிர்காலத்திற்கு நற்சான்று ஒப்புகிறது. கால்நடை மருத்துவர்கள், அரசின் கால்நடை வளர்ப்புத் துறைகள், தனியார் கோழிப்பண்ணைகள், மாட்டுப்



மருத்துவ கல்வியின் ஒரு பகுதியான கால்நடை மருத்துவத்தின் வரலாறும் அதன் பரிணாம வளர்ச்சியும் வியப்பிற்குரியது. கிமு 2500ஆம் ஆண்டுகளிலேயே மாடுகளுக்கு கன்று ஈனுதல் குறித்த குறிப்புகள் எகிப்திய சக்காரா சிற்பங்களில் உள்ளன. விலங்கின தொடர்பு தமிழர்களிடம் பண்டைய காலம் தொட்டு இருந்ததை சங்க இலக்கியங்களும் கோயில் சிற்பங்களும் எடுத்தியம்புகின்றன. உணவு மற்றும் தொழிலுக்கு மூலதனமான கால்நடைகளைப் பாதுகாத்தலும் பராமரித்தலும் மனித இனத்திற்கு இன்றியமையா தாகிறது. எனவே விலங்குகளை தாக்கும் நோய்களையும் அதற்கான மருத்துவத்தையும் மனிதன் தன் அனுபவத்தில் கண்டான். அனுபவ அறிவால் தொடங்கிய விலங்கின மருத்துவம் இன்று அறிவியல் முறையில் கால்நடை மருத்துவமாக விரிந்துள்ளது.



பண்ணைகள், ஆடு, மீன், பன்றி மற்றும் முயல் பண்ணைகள், பால்பண்ணைகள், குதிரைப் பந்தய சங்கங்கள், தனியார் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள்,கால்நடை மருந்து மற்றும் தடுப்பூசி ஆய்வகங்கள், உணவு உற்பத்தி தொழிலகங்கள், காட்டுயிர் மையங்கள், மிருகாட்சிசாலைகள் ஆகியவற்றில்



வேலைகளைத் தொடரலாம். பட்டப்படிப்பை முடித்த மாணவர் ஒருவர், அறுவையியல், நோயியல், மருத்துவயியல் போன்ற சிறப்புத் துறைகளில் முதுகலை, முனைவர் அல்லது ஆய்வு படிப்பைத் தொடர்ந்து பேராசிரியர்கள் ஆகலாம்.

2014ஆம் ஆண்டு மலேசிய கிளந்தான் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ கல்லூரியில் அடியெடுத்து வைத்த நான், அதன் கடினமான பாடத்திட்டத்தை விரும்பியேற்று, பட்டறிவை ஆழ்ந்து கற்று, 2019ஆம் ஆண்டு டி.வி.எம் (Doctor of Veterinary Medicine) பட்டம் பெற்றேன். பட்டமளிப்பு விழாவில் குதிரை மருத்துவத்தில் சிறந்த மாணவர் என்ற விருது அளிக்கப்பட்டது இரட்டிப்பு மகிழ்ச்சி. 2018 ஆம் ஆண்டு மாடு மற்றும் பால் உற்பத்தி சார்ந்த கூடுதல் பயிற்சி பெறுவதற்காக பாண்டிச்சேரி மற்றும் சென்னையில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகங்களில் ஒருமாதக் காலம் செலவிட்டது மறக்கமுடியாத அனுபவம். தவிர, எனது இறுதியாண்டு ஆய்வின் வழி தமிழர்கள் அதிகம் விரும்பி உட்கொள்ளும் முருங்கை இலையின் வேதிப்பொருட்களை நீர்வாழ் உயிரினமான இறாலை தாக்கும் ஒருவகை நோயை எதிர்க்கும் தடுப்பு மருந்தாக வெற்றிக்கரமாக மெய்ப்பித்தது மற்றுமொரு ருசீகர அனுபவம். கால்நடை மருத்துவர்கள், கால்நடை மருத்துவமனைகளில் மாத்திரம் பணிபுரிபவர்கள் அல்லர், அதன் வேலை வாய்ப்பு மிகவும் பரவலானது எனக் குறிப்பிட்டேன் அல்லவா? அதற்கு நானே சாட்சியாகவும் நிற்கிறேன். தற்பொழுது, NAM Pharma எனும் முதன்மை கால்நடை மருந்து தயாரிப்பு தொழிற்சாலையில் நிர்வாக பொறுப்பிலும் பண்ணை விலங்குகளின் மீது புதுவகை மருந்துகளை ஆய்வு செய்யும் ஆராய்ச்சி குழு அதிகாரியாகவும் பணியாற்றுகிறேன்.

நம்மவர்கள் மத்தியில் கால்நடை மருத்துவம் மனித மருத்துவத்தைவிட ஒருபடிகீழ் என்ற ஒரு பொதுவான கருத்து இருந்து வருகிறது. “மாட்டு டாக்டர்” எனும் ஏளனமான சொல்லாடலும் பேச்சு வழக்கில் உள்ளது. உண்மையாதெனில், கால்நடை மருத்துவம் எந்த வகையிலும் எந்த கல்விக்கும் குறைவானதில்லை. மேலை மற்றும் வளர்ந்த நாடுகளில் கால்நடை மருத்துவமே அதிஉயரிய படிப்பாகக் கருதப்படுகிறது. கால்நடை மருத்துவர் என்பதால் சிலாகித்தோ அதிகப்படுத்தியோ கூறவில்லை. வேலைவாய்ப்புகள் மற்றும் ஊதியம் அடிப்படையில் கால்நடை மருத்துவம் மனித மருத்துவத்தை முந்தியிருப்பதே நிதர்சணமான உண்மை. இதை உணர்ந்து, தம்பி தங்கைகள் மனித மருத்துவத்தில் காட்டும் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் கால்நடை மருத்துவத்திலும் காட்ட வேண்டும் என்பதே என் அவா. கால்நடை மருத்துவம் சுலபமானது இல்லை என்றாலும் நம்மால் முடியும் என்ற உறுதியுடன் முயன்றால் முடியாதது ஏதுமில்லை. இதையே வள்ளுவ பெருந்தகை,

“வினைத்திட்பம் என்பது ஒருவன்
மனத்திட்பம் மற்றைய எல்லாம் பிற”
என்று பாடினார்.

வாழ்த்துகள்!



02

# கொரோனா காலத்து நினைவுகள்

ச.சஜீபன்
உளவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# கொரோனாவும் தனிமனித சுகாதாரமும்.

உலகை தன் கைக்குள் அடக்கி வைத்திருக்கும் கொரோனாவை கட்டுப்படுத்த தனிமனித சுகாதாரம் இன்றி அமையாதது. வருவதற்கு முன் கவனம் என்றால் வந்தபின் பயமில்லை. சுகாதாரம் என்கின்ற போது உடல்,உள, சமுக,ஆன்மீக ஆரோக்கியமாகும்.

எதையும் சாதித்துவிட உடல்நலம் சீராக காணப்பட வேண்டும். இன்றைய காலகட்டத்தில் கொரோனாவை எதிர்த்துப் போராட பல சுகாதாரம் சார் விடயங்களை முன்வைக்கின்ற போதிலும் அவை பொதுவாக நாம் சிறுபராயம் தொடக்கம் அறிந்து கற்ற விடயமாபோன்றவைறு துள்ளித் திரிந்த காலத்தில் பெற்றோர், ஆசிரியர் சொல் கேட்டு பின்பற்றிய நாம் அறிவு வளர்ந்தும் பின்பற்ற மறுக்கின்றோம்.

மேற்கொள்ளப்படுகிறது.தும்மும் போதும் இருமும் போதும்று கைக்குட்டை பாவிப்பதால் நோய் தொற்றை தவிர்க்கமுடியும்.

கொரோனா அறிகுறிகளான காய்ச்சல், முச்சுத் திணறல், இருமல் போன்ற காணப்படுகின்ற பொழுது நாம் நேரடியாக வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெறுதல் நன்று அதைவிடுத்து எமக்கு தெரிந்த மருந்துகளை பாவிப்பது ஆபத்தான ஒன்று.

உடலோடு மட்டும் சுகாதாரத்தை நிறுத்திவிட்டு உள நலத்தை இக்காலப்பகுதியில் பேணாத போது பல இடர்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் . நோய்த்தொற்று காரணமாக பாதிக்கப்பட்டவர்களையும், இறந்தவர்களையும், நான் பாதிக்கபடுவேனோ எனறு எண்ணி தேவையற்ற

நாம் கைகளை நன்றாக கழுவ வேண்டும். முதலில் கையை ஈரமாக்குதல், பின் சவர்காரம்று இட்டு தன் உள்ளங்கைகளை நன்றாக ஒன்றுடன் ஒன்று தேய்த்து, வலது கை விரலைறு இடது கைவிரல் இடுக்கில் உரசி, மணிக்கட்டு வரை நன்றாக கழுவுதல் அவசியம்.

தொற்று நோய் என்பது ஒருவரிடம் இருந்து ஒருவருக்கு தொற்ற கூடியது. நாம் வெளியில் சென்று வந்த பின்னர் கைகளை கழுவாமல் கண்,முக்கில் தொடக்கூடாது .அவ்வாறு தொடுகின்ற போது கிருமி தொற்று இலகுவாக உடலோடு சேர்ந்துவிடும்.முக கவசம் அணிந்து வெளியில் செல்வதாலும் கிருமி தொற்றில் இருந்து எம்மை பாதுகாக்க முடியும்.

உடல்நலத்தைப் பேணுவதில் உணவுப் பொருள்கள் இன்றியமையாதது. மஞ்சள், மிளகு, இஞ்சி, பூண்டு, கொத்தமல்லி, புதினா, சீரகம், பெருங்காயம் ,அன்னாசிப்பூ, முந்திரி ,கீரை என்பவற்றை உணவோடு சேர்த்தல் அவசியம். குளிர்பானம், விரைவு உணவுகளையும் தவிர்த்தல் வேண்டும்.

தும்மல் என்றாலே தூர ஓடும் மக்கள் தனியார் இடைவெளியை கட்டாயம் பின்பற்ற வேண்டும். குறைந்தது 3M இடைவெளி காணப்படல் வேண்டும். இதனாலே ஊரடங்கு நாடெங்கிலும் அமுலாக்கி வைரஸ் தாக்கத்தை குறைக்க முயற்சி

கருத்துக்களை நினைத்து அச்சம் அடைந்தால் உள நலம் பாதிக்க கூடிய நிலை ஏற்படுகிறது. சிறுவர்கள், முதியோர்கள் அதிகம் உள்ளாகும் தன்மை காணப்படுகிறது.

இன்றைய நிலையில் கற்றலுக்கு முற்றுப்புள்ளி வைத்து எவ்வாறு பொழுதை கொண்டு செல்வது என பல மாணவர்களது நிலைகள் காணப்படுகிறது. பள்ளி சென்று சுற்றித்திரிந்த கால்கள் முடக்கப்பட்டு, நண்பர்களுக்கிடையிலான உரையாடல் இன்றி, கற்றல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு அனைவரது எண்ணங்களும் உழசழயெ பற்றிய சிந்தனையாக மாறி உளநலம் பாதிக்கப்படுகிறது.

இத்தகைய நிலையில் மாணவர்களது வழமையான செயற்பாட்டை ஊக்குவிக்கும் பொறுப்பு ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களதாகும். இவ்வளவு காலமும் குடும்ப சுமை தாங்கி அன்றாடம் வேலை சென்று வந்த நீங்கள் சிறார்களுக்கென நேரத்தை ஒதுக்குங்கள். அவர்களது கற்றல் நடவடிக்கையை தொடர பாட புத்தகங்கள் மீட்டல் செய்ய ஊக்குவியுங்கள். ஏனைய செயற்பாடுகளான விளையாட்டு, ஆக்கத்திறனான விடயங்கள், ஆடல், பாடல், ஓவியம் வரைதல் போன்றவற்றில் நீங்களும் துணை நின்று முன்னோக்கி நகர்த்த ஊன்றுகோளாய் செயற்படுங்கள் அத்தோடு உங்களது

அனுபவம் சார்ந்த விடயங்களை பகிர்ந்து கொள்வதோடு ஆசிரியர் மற்றும் ஏனைய நண்பர்களோடு தொடர்பாடலை ஏற்படுத்தி கொடுப்பதாலும் வழமையான நாள் போன்று மாற்றியமைக்க முடியும்.

ஊரடங்கால் சில மக்களிடம் வன்முறை வலம் வருகிறது. பெற்றோர்களுக்கிடையிலான முரண்பாடுகள், பிள்ளைகளுக்கிடையிலான சண்டைகள், அயல் வீட்டுபிரச்சினைகளென வன்முறைகள் எழுந்து கொரோனா நோய் தாக்கம் என்பதை விட உளரீதியான தாக்கம் ஏற்படுகிறது. இதனால் மன அழுத்தம்,பதகளிப்பு, ,தற்கொலை, பாலியல்சார் பிரச்சினைகளுக்கும் பலர் முகம்கொடுக்கின்றனர்.

இத்தகைய நிலையில் கருத்துமுரண்பாடுகள் ஏற்படும் போது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதனூடாகவும்,கணவன், மனைவி,பிள்ளைகளுக்கிடையில் கலகலப்பான உரையாடல்களுடனும், மனதுக்கு இதமான பாடல்கள்,கருத்துள்ள திரைப்படங்களை பார்பதனூடாகவும், கைவினைப் பொருட்கள், வீட்டுத்தோட்டம், தியானம், யோகா என்பவற்றை மேற்கொள்வதோடும் இணையதள பாவனையில் நன்மை தரும் ஊக்குவிப்பும் விடயங்களை தேடி அறிவதோடும், செல்லப்பிராணிகளை வளர்த்தல், நாட்டுப்புற விளையாட்டுக்கள் மற்றும் சமையல் வேலையில் உதவுதல் போன்றவற்றில் ஈடுபடுவதாலும் வன்முறையை தவிர்த்து உளநலத்தை பேணமுடியும். நீங்கள் செய்த தவறுக்கான ஒரு தண்டனையாக தனிமைப்படுத்தல் என்பது அமையவில்லை. உங்களையும் பிறரையும் பாதுகாப்பதற்கான ஒரு விடயமாகவே காணப்படுகிறது.இதன் போது உள ரீதியாக தைரியம் காணப்பட வேண்டும்.

உடல், உளம் என்பவற்றோடு சுற்றுச்சூழல் தூய்மை என்பதும் முக்கியமானதாகும். வீட்டுக்கழிவுகளில் சேதன பசளைகளை உருவாக்கி வீட்டுத் தோட்டத்திற்க்கு பயன்படுத்துவதோடும் ஏனைய கழிவுகளை உரிய முறையில் அகற்றுதல் வேண்டும்.

எம் சுற்றத்தவர்கள் வறுமையில் காணப்பட்டால் இயலுமானவரை உதவுதல் கட்டாய நிலையாகும். கொரோனா தொடர்பான விழிப்புணர்வுகளை முடிந்தளவு ஏனைய மக்களுடன் கலந்துரையாடுவதால் சுற்றத்தாரையும், எம்மையும் பாதுகாக்க முடியும்.

இவ்வாறாக உடல், உள,சமூக நலத்தையும் பேணுவதில் தனிநபர் சுகாதாரம் முதன்மை பெறுகிறது. கொரோனாவை எதிர்த்து போராட ஒவ்வொருவரும் தமது சுகாதாரத்தை உறுதி செய்ய வேண்டும்.

# கருத்துக்கணிப்பு

அலுவலகங்களில் சென்று வேலை செய்வது என்பது தவிர்க்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள சூழலில் வீட்டிலிருந்தே வேலை செய்யும் வசதியை சில நிறுவனங்கள் செயற்படுத்தி முழுமையாக இயங்கி வருகின்றன. ஆனால் எல்லா வேலைகளுக்கும் இது பொருந்தாது. சாத்தியமுள்ளவர்கள் சாதகமாக்கி உள்ளார்கள். நிறுவனங்கள் பல முடங்கியுள்ள நேரத்தில் இது நிறுவனங்களை பொறுத்தவரை இலாபகரமான செய்முறை. ஆனால் ஊழியர்களின் பார்வையை பார்ப்பதற்காகவே இந்த கேள்வி கேட்கப்பட்டது.

பெரும்பாலானவர்கள் கொரோனா காலத்திற்குள் மட்டும் இம்முறையை ஏற்பதாக கூறியுள்ளார்கள். ஆனால் 21.0வீதத்தினர் அலுவலகமே வேலை செய்ய பொருத்தமான இடமென கூறியுள்ளனர். வேலை செய்வதற்கான சூழலை ஏற்படுத்துவது என்பது எல்லோருடைய வீட்டிலும் சாத்தியமற்றது. பல இடர்நிலைகளை சமாளிக்க வேண்டிய தர்மசங்கடம் ஏற்படும்.

27.4வீதத்தினர் இம்முறை எப்போதும் தொடர விரும்புகிறார்கள். போக்குவரத்து சிரமங்கள் இல்லை, உணவுக்கான இடர்பாடுகள் குறைவு, மன அழுத்தம் குறைவு என்கிற பல நன்மைகள் வீட்டிலே இருந்து வேலை செய்வதால் கிடைக்கும்

விரும்பியோ விரும்பாமலோ கொரோனா காலத்தில் வீட்டில் இருந்து வேலை செய்ய கூடியவர்கள் செய்யத்தான் வேண்டும். நாட்டின் பொருளாதாரத் திற்கும் அது வலுச்சேர்க்கும். இதனையே மக்களும் தீர்ப்பாய் சொல்லியிருக்கிறார்கள்.






இணுவில் கிருஷ்ணா
(இ. கிருஸ்ணராஜ் NDT, B.A. B.ED)
ஆசிரியர்

# ஊர் கதை பேசுவோம்

## கதை 1

### அமைவிடம்

இந்து சமுத்திரத்தின் பட்டை தீட்டிய இரத்தினமாய் மிளிரும் ஈழமணித்திருநாட்டின் தலையாய் அமைந்துள்ள யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் நெற்றிப்பொட்டிட்டாற் போல் விளங்குவது இணுவையம்பதி ஆகும். இது காங்கேசன் துறை வீதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கே 7km தொலைவிலும் காங்கேசன்துறையில் இருந்து தெற்கே 11km தொலைவிலும் வடக்கே சுன்னத்தையும் தெற்கே கோண்டாவிலையும் கிழக்கே உரும்பிராயையும் தென் மேற்கே தாவடியையும் மேற்கே சுதுமலையையும் வட மேற்கே உடுவிலையும் எல்லைக் கிராமங்களாகக் கொண்டு அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் ஒன்றாகிய காங்கேசன்துறை வீதி இணுவிலூரை இரு பெரும் நிலப்பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இவ்வூர் நிர்வாக ரீதியாக உடுவில் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்து இருந்தாலும் ஊரின் சில பகுதிகள் நல்லூர் மற்றும் கோப்பாய் பிரதேச சபைகளின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### வரலாற்றில் இணுவையூர்

இலங்கை தமிழர்களின் வரலாறு தொன்மையும் பழமையும் வாய்ந்ததாக அமைந்திருப்பினும் வரலாற்று நோக்கில் கி.பி 13ஆம் நூற்றாண்டில் இருந்தே யாழ்ப்பாணத் தமிழர்களின் வரலாற்றையும் ஊர்களின் வரலாற்றையும் ஆராய வேண்டியுள்ளது.

கி.பி 13ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் சிறப்புற்று விளங்கியமைக்கு இராமாயண காலம் முதல் பல இலக்கிய புராணச் சான்றுகள் கிடைத்தாலும், முதலாம் குலோத்துங்க சோழனின் படைத் தளபதியாக கருணாகரன் என்பவன் காரைக்கால் பகுதியில் தங்கியிருந்தான் என்றும் அன்றைய காரைக்கால் இன்றைய இணுவில், கோண்டாவில், உரும்பிராய் ஆகிய ஊர்களை இணைத்த பேரூராய் விளங்கியிருக்க வேண்டும் என்றும் திரு. செ. இராசநாயக முதலியார் யாழ்ப்பாண சரித்திரம் எனும் நூலில் குறிப்பிடுவதும், யாழ்ப்பாணக் குடியேற்றம் என்னும் நூலில் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அதை வலியுறுத்திச் சொல்வதும் 13ஆம் நூற்றாண்டுக்கு முன்னரும் இணுவில் சிறப்புற்று விளங்கியது என்பதற்கு சான்றாகிறது.

சோழ நாட்டிலிருந்து வந்த யாழ் பாடியான கவி வீரராகவன் செங்கடக நகர அரசனைப் புகழ்ந்து பாடி யாழ்ப்பாணத்தை பரிசாகப் பெற்றான் என்றும் அதன் பின்னர் தமிழகத்திலிருந்து குடிகளை அழைத்து குடியமர்த்தினான் என்றும் அவ்வாறு குடியமர்த்தியவர்களில் கோவலூரிலிருந்து இலங்கை வந்த பேராயிரமுடையான் என்னும் வேளாளனை இணுவிலில் இருத்தினான் என்றும் யாழ்ப்பாண வைபவமாலை சான்று பகர்கின்றது. இக்கருத்தை ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை கோவலூர் வேளாளனும் மேழிக்கொடியானும் குவளை மாலையும் பெரும் பராக்கிரமமும் கல்வியும் கட்டழகும் உடையவனுமாகிய பேராயிரவனை, கரும்பும் கமுகும் வாழையும் நெல்லும் செழித்து ஓங்கும் வளமுடைய இணுவில் என வழங்கும் இணையிலியில் குடியமர்த்தினான் என யாழ்ப்பாண சரித்திரம் எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாண அரசுத் தொடக்க காலத்தில் இவ்வூர் அதன் ஆட்சி பிரிவுகளுள் ஒன்றாக விளங்கியது எனவும் பல வளங்களும் நிறைந்து காணப்பட்டது என்றும் இவ்வூர் இணையிலி என அழைக்கப்பட்டது என்றும் வரலாற்று நூல்கள் சான்று பகிர்கின்றன.

பேராயிரவனின் பின் காசிங்கராயன் என்பவன் சிற்றரசர்களைப் போல் இவ்வூரை ஆட்சி செய்தான். அவனைத்

தொடர்ந்து அவன் மகன் கைலாயநாதன் ஊரைக் காத்தான். இவர்கள் காலத்திலேயே இவ்வூர் சிறப்படைந்தது. இளந்தாரி என்று அழைக்கப்பட்ட கைலாயநாதன் புளிய மரத்தில் ஏறி உடலை நீக்காமல் முக்தி அடைந்ததாகவும் பின் ஊர்மக்களுக்கு காட்சி கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. இவருக்கான இளந்தாரி கோவில் தமிழர் பண்பாட்டு வழிபாட்டு முறையான நடுகல் வழிபாட்டு முறையாக இன்றும் இடம்பெறுவது தனிச்சிறப்பு.

## இணுவிலும் கோவில்களும்



கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஆன்றோர் வாக்கிலும் ஒரு படி உயர்ந்து ஊரே கோவிலாய் அமைந்திருக்கும் சிறப்புடையதாகி கோவிலூர் என போற்றத்தக்கதாய் விளங்குவது நம் இணையிலி ஆகும்.

முதலாம் குலோத்துங்க சோழனின் படைத்தளபதியான கருணாகரன் என்பவரால் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் காரைக்கால்பதி, காலிங்கனால் சிதம்பரத்திலிருந்து எடுத்துவந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட மூல மூர்த்தியை உடைய சிவகாமி அம்மன் ஆலயம், யாழ்ப்பான ஆட்சியாளர்களான பரராஜசேகரன், செகராஜசேகரன் ஆகியோரால் அமைக்கப்பட்டதாக கருதப்படும் பரராஜசேகரப்பிள்ளையார், செகராஜசேகரப்பிள்ளையார் ஆலயங்கள், முருகன் சோதியாய் ஊருக்குள் காட்சி கொடுத்து அந்தணச் சிறுவனாய் கனகராச முதலியின் கனவில் தோன்றியதால் உதித்த இணுவில் கந்தசுவாமி கோயில், பெருமஞ்சம் செய்த சன்னாசியாருக்கு கட்டிய சமாதிக் கோவிலாகிய மஞ்சத்தடி அருணகிரிநாத சிவ சுப்பிரமணிய கோவில், ஆட்சியாளர்களால் தம் போர்க் கால வழிபாடுகளை மேற்கொண்ட மாணிக்க வைரவர் பத்திரகாளி கோவில், ஆட்சியாளன் கைலாயநாதன் ஊரின் காவல் தெய்வமாய் அருள் சுரக்கும் இளந்தாரி கோவில் என்பவற்றுடன் தொன்மை பேசும் இன்னும் பல ஆலயங்களும் புதிதாய் உருவான இணுவில் சுந்தர ஆஞ்சநேயர் கோவில், இணுவில் திருப்பதி கோவில், ஞானலிங்கேஸ்வரர் கோவில் எனப்பல ஆலயங்களும் அழகு சேர்க்கும் கோவில் ஊராய் எம் இணுவிலூர் விளங்குவது தனிச்சிறப்பு. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் இவ்வூர் ஆலயங்கள் அழிக்கப்பட்டன. ஆனாலும் இவ்வூரின் சமய வாழ்வையும் பண்பாட்டையும் யாராலும் சிதைக்க முடியாமல் போனது இவ்வூருக்கு உரித்தான தனிச்சிறப்பாகும். அழிக்கப்பட்ட ஆலயங்கள் காலம் தந்த பெரும் பொக்கிஷங்களான பெரிய சன்னாசியார், வடிவேற் சுவாமிகள், அம்பலவாணர் சுவாமிகள், சாத்திரம்மா போன்ற அருளாளர்களின் பெரு முயற்சியினால் மீண்டும் அமைக்கப்பட்டதோடு காலத்துக்கு காலம் பல மாற்றங்களைக் கண்டு பொலிவு பெற்றுத் திகழ்கின்றன.

ஆலயங்களை சார்ந்து இயங்கியும் சித்த, மணி மந்திர மருத்துவ கூடங்களும், சோதிட நிலையங்களும் ஊருக்கு மேலும் பெருமை சேர்ப்பனவாய் அமைந்திருந்தன. ஆலயங்களுடன் இணைந்ததாய் எழுந்த சபைகள் இன்றும் தமது பணிகளை தொடர்ந்து கொண்டிருப்பது போற்றுதற்குரியது

## கலைகளும் கலைஞர்களும்

தமிழிலும் சமயத்திலும் பற்று மிக்க இவ்வூர் யாழ்ப்பாண அரசின் ஆட்சிக்காலத்திலிருந்தே கல்வி, கலைகளில் தடம் பதித்த ஊராகவே திகழ்ந்திருக்கிறது. நல்லூர் இராசதானி காலத்தில் இணுவிலிலும் ஒரு தமிழ்ச்சங்கம் இயங்கியதாக குறிப்பிடப்படுகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்தவரான இணுவில் சின்னத்தம்பிப் புலவர் முத்தமிழும் கைவரப் பெற்றவராய் விளங்கியுள்ளார். இவர் பஞ்சவர்ணத் தூது, சிவகாமி அம்மன் துதி, சிவகாமி அம்மன் திருவூஞ்சல், சுப்ரமணியன் திருவூஞ்சல், கைலாயநாதன் தோத்திரம், கைலாயநாதன் திருவூஞ்சல், மறியக் கொச்சகம், அனிருத்திரன் நாடகம், நொண்டி நாடகம், வசந்தன் நாடகம், கோவலன் நாடகம், இளந்தாரி புராணம் ஆகிய பன்முக இலக்கியங்களைப் படைத்துள்ளார்.



ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த நடேசய்யரின் சிவஞானசித்தியார் உரையும், அம்பிகைபாகன் தணிகை புராண உரையும், இணுவிலின் கல்விப் பாரம்பரிய தொடர்ச்சிக்கு சான்றாகின்றன. பிற்காலத்தில் உதயணன், பண்டிதர் கா.செ.நடராசா, இயல் இசை வாரிதி என். வீரமணி ஐயர், சா.வே பஞ்சாட்சரம், இணுவையூர் சிதம்பர திருச்செந்தில்நாதன், கலாபூஷணம் கா.சச்சிதானந்தன், இணுவை உருத்திரன் போன்றோர் கலை இலக்கிய உலகிற்கு பணியாற்றியவர்கள் ஆகவும் பணியாற்றுபவர்கள் ஆகவும் விளங்குகின்றனர்.

இவ்வூரில் ஆலயங்கள் கலை நிகழ்ச்சிக் தளங்களாக விளங்கியமையால் இணையிலி கலை வாழ் பதியாக செழிப்புற்றது. நாடகத்துறை வளர்ச்சியில் இவ்வூரின் பங்களிப்பு அளப்பரியது. சின்னத்தம்பிப் புலவர் நாடக நூல்களை ஆக்கியதோடு ஏரம்பு, சுப்பையர் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவராவர். சின்னத்தம்பி சட்டம்பியார் சிறந்த நாடக ஆசிரியராகவும் விளங்கினார். இன்றும் ஈழம் போற்றும் பல நாடகக் கலைஞர்கள் இங்கு வாழ்கின்றார்கள்.

தவில் நாதஸ்வரக் கலையில் தனக்கென தனி இடத்தைக் கொண்டிருக்கும் இணுவில் பி.தட்சிணாமூர்த்தி, என்.ஆர்.சின்னராசா, இ.சுந்தரமூர்த்தி, இ.புண்ணியமூர்த்தி போன்ற பல கலைஞர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. சொற்பொழிவாளர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், மறைந்த வயலின் வித்துவான் ராதாகிருஷ்ணனும் இணுவையூர் ஈன்றெடுத்த கலைப் பொக்கிஷங்களாவர். இங்கு இயங்கும் இசை, நடன கல்லூரிகள் புகழ்பெற்று விளங்குகின்றன. அதேநேரம் வீரமணி ஐயாவின் இசை நடன பணியும் போற்றத்தக்கது.



**இணுவையின் அடையாளச்சின்னங்கள்**

நிலத்தடி நீர்வளமும் நிலவளமும் நிறைய பெற்ற இலங்கையின் பிரதான ஜீவனோபாயம் விவசாயமாகும். இவ்வூர் புகையிலை உற்பத்தியில் பெயர் பெற்றது. மலையகத்தில் இணுவில் புகையிலைக்கு இன்றும் தனி மதிப்பு உண்டு. அண்ணா தொழிலதிபர் நடராசா அவர்களின் பெரு முயற்சியால் ஐம்பதுகளில் உருவான அண்ணா கோப்பி இன்று ஊரின் பெருமை பேசும் கைத் தொழில் நிறுவனமாக உயர்ந்து நிற்கின்றது.

இறைவனின் கல்விப் பாரம்பரியத்தை பேணிப்பாதுகாத்த இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்பனவும் இராமநாதன் நுண்கலைக் பீடம், இணுவில் பொது நூலகம், அறிவாலயம் என்பனவும் அறிவூற்றுகளாக மிளிர்கின்றன.

பெரிய சன்னாசியரின் முயற்சியின் பயனாக விளைந்த இணுவைக்கந்தனின் திருமஞ்சம் உலகப் பெருமஞ்சம் என்னும் சிறப்புடன் அரிய கலைப் பொக்கிஷமாய் மிளிர்கின்றது. இணுவைக் கந்தனின் கடா வாகனம், சூரன், சிவகாமி அம்மன் ஆலய மகிஷாசுரன், குதிரை வாகனம், சிம்ம வாகனம் என்பனவும் கலைநயம் மிக்க கலை பொக்கிஷங்களாக விளங்குகின்றன.

தொண்ணூறுகளில் முன் புகழ்பெற்ற பிரசவ வைத்திய சாலையாக விளங்கிய மக்லியோட் வைத்தியசாலை, யாழ்ப்பாண முக்கிய மரக்கறி சந்தைகளில் ஒன்றான மருதனார்மடம் சந்தை, இணுவில் புகையிரத நிலையம் என்பனவும் அடையாளச் சின்னங்களாக மிளிர்கின்றன.

**நிறைவுரை**

ஈழத்துத் தமிழர் வரலாற்றில் வாழ்வியல், பண்பாடு, கல்வி, கலைகள் என அனைத்திலும் தனித்துவப் பண்புகளைக் கொண்டிருந்த இவ்வூரை நாடி காலத்திற்குக் காலம் பல ஞானிகளும் யோகிகளும் வந்து தங்கிச் சென்றமையானது இவ்வூரை சித்தர் பூமியாக பொலிவுறச் செய்தது. இன்று இணுவிலார் இல்லாத துறையே இல்லை எனக்கூறுமளவிற்கு அனைத்துத் துறைகளிலும் இவ்வூர் புகழ்பெற, கவின்மொழி பூமியாகிய என்றும் இணையிலியாய் மிளிர்வது நமது இணுவைத்திருவூர் ஆகும்.

**உசாத்துணைகள்**

இணுவைச் சிவகாமியம்மை தமிழ், தமிழ வேள்,1991, தமிழவேள் வெளியீடு.
இணுவை அப்பர், கா.செ. நடராசா, 1979, வைத்தியர் சு.ராமலிங்கம்.
இணுவையூர் சின்னத்தம்பி புலவர், செல்வி. கார்த்திகாயினி நடராசா, 1988.
மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, முதலியார் குல.சபாநாதன், 1995, இந்து சமய அலுவல்கள் திணைக்களம்.
சீர் இணுவைத் திருவூர், மூ. சிவலிங்கம், 2004, இணுவில் சைவத் திருநெறிக் கழகம்.
இணையிலி, மூ.சிவலிங்கம், 2013, இணுவில் சைவத்திருநெறிக் கழகம்.

தொடர்ச்சியான சிறப்பான உள்ளூர் ஆட்டத்தின் பெறுபேறுகள் 1999 ஆம் ஆண்டு இலங்கை இளையோர் அணியுடனான தொடரில் விளையாட இந்திய இளையோர் அணிக்கு தெரிவு செய்யப்பட்டு இருந்தார் யுவராஜ் சிங். இந்த தொடரில் இடம்பெற்ற மூன்றாவது ஒரு நாள் போட்டியில் வெறுமனே 55 பந்துகளில் 89 ஓட்டங்களை அதிரடியாக ஆடி குவித்ததோடு, தொடர் முழுவதும் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத் தடுப்பு என சகல துறைகளிலும் அசத்தி இருந்தார் யுவராஜ். இந்த பெறுபேறுகள் மூலம் 2000ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற இருந்த இளையோர் உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் தனது இடத்தை உறுதி செய்து கொண்டார் என்றே சொல்லலாம். அத்தோடு 1999 இல் நடைபெற்ற ரஞ்சிக்கிண்ண போட்டியில் ஹரியான அணிக்கான போட்டியில் அதிரடியாக ஆடி பெற்றுக்கொண்ட 149 ஓட்டங்கள், பந்துவீச்சு பெறுதிகள் யுவராஜ் சிங் ஐ அதிரடியாக துடுப்பெடுத்தாடக்கூடிய சகலதுறை வீரராக உருவாக்கி இருந்தது. இதன் பலன் 2000ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இளையோர் உலகக்கோப்பை தொடரிற்கு முகமது கைப் தலைமையில் முக்கியமான வீராக தேர்வு செய்யப்பட்டு இருந்தார் யுவராஜ்.






2000ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற உலகக்கோப்பை தொடர், யுவராஜ் சிங் இன் கிரிக்கெட் பயணத்தில் பெரிய திருப்புமுனை. அந்த தொடரில் சகலதுறைகளிலும் ஜொலித்த யுவராஜ் சிங். இந்திய அணிக்கு கிண்ணத்தை பெற்றுக்கொடுத்ததோடு தொடர் நாயகனாகவும் ஜொலித்தார். லீக் ஆட்டம் ஒன்றில் நியூசிலாந்து அணிக்கு எதிராக 62பந்துகளில் 68ஓட்டங்களை பெற்றதோடு பந்துவீச்சில் 4 இலக்குகளையும் சாய்த்து இருந்தார். அத்தோடு மிக முக்கியமான அரையிறுதிப்போட்டியில் மிக மிக அதிரடியாக ஆடி வெறுமனே 25பந்துகளில் 58ஓட்டங்களை பெற்று வெற்றிக்கு வழி சமைத்தார். உலகக் கோப்பை தொடரின் தொடர் நாயகனை வரவேற்க இந்திய அணிக்கு அவ்வளவு காலம் தேவைப் பட்டு இருக்கவில்லை. ஆனாலும் யுவராஜ் இந்திய அணிக்கு உள்வாங்கப்பட்ட காலம் இந்திய அணிக்கு சற்று சோதனைக்குரிய காலம்.

கபில் தேவ் இன் ஓய்வின் பின்னர் அசாருதீன் அணிக்கு தலைமை தாங்கிக் கொண்டு இருந்தார். இந்திய அணி வெற்றிகளின் அளவுக்கு தோல்விகளை யும் சந்தித்துக் கொண்டு இருந்தது. அசாருதீனின் பின்னர் சச்சின் டெண்டுல்கரின் கைக்கு தலைமை பொறுப்பு வந்தது. துடுப்பாட்ட ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் துடுப்பாட்டத்தில் அசத்திய அளவுக்கு அணித்தலைவராக அசத்த முடிய வில்லை. மிகவும் குறுகிய காலத்திலேயே அணித்தலைவர் பொறுப்பை துறந்தார் சச்சின். அடுத்த தலைவராக நியமிக்கப்பட்டார் வங்கப்புலி கங்குலி. அந்த நேரத்தில் தான் அசாருதீன், நயன் மொங்கியா, அஜய் ஜடேஜா என இந்திய அணி சூதாட்ட புகாரில் வேறு சிக்கித் தவித்தது. இந்த நேரத்தில் பதவி ஏற்றுக் கொண்ட கங்குலிக்கு இளம் வீரர்கள் அடங்கிய இந்திய அணி ஒன்றை கட்டி எழுப்ப வேண்டிய தேவை இருந்தது. யுவராஜ் சிங் இளையோர் உலகக்கோப்பையில் காட்டிய சகலதுறை பெறுபேறுகள் இந்திய அணிக்கான அவரது கதவை திறந்தே வைத்திருந்தது. 2000ஆம் ஆண்டு கென்யாவில் நடைபெற்ற "நாக்-அவுட்" தொடருக்கான இந்திய அணியில் யுவராஜ் சிங் இணைத்துக்கொள்ளப்பட்டு இருந்தார்.

**சர்வதேச கிரிக்கெட் அரங்கில் யுவராஜ் சிங்...**

கென்யாவில் நடைபெற்ற நாக்-அவுட் சுற்றுப் போட்டியில் கென்யாவுடனான போட்டியில் ஆடுவதற்கு யுவராஜ் சிங் வாய்ப்பை பெற்றார். அதே போட்டியில் தான் இந்திய அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் சகீர் கானும் அறிமுகம் ஆகினார். அறிமுகப்போட்டியில் வெறுமனே நான்கு ஓவர்கள் பந்துவீச மட்டுமே வாய்ப்பு கிடைத்தது. இந்திய அணி எட்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுக் கொள்ள துடுப்பெடுத்தாடும் வாய்ப்பு இல்லாமல் போனது. ஆனாலும் அடுத்ததாக நடைபெற்ற காலிறுதிப் போட்டி உலக சாம்பியன் ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது இந்தியா. அப்போது இருந்த ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சு படை



க்ளென் மெக்ராத், ஜிலெக்ஸ்பி, பிரட் லீ என எதிரணிகளை நடுங்க வைத்துக் கொண்டு இருந்த கூட்டணி. அதற்கு ஏற்றாற் போல் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சொற்ப ஓட்டங்களில் நான்கு இலக்குகளை இழந்து தத்தளித்தது. களம் புகுந்த யுவராஜ் சிங், இளம்கன்று பயம் அறியாது என்பது போல ஆஸ்திரேலியர்களை ஆட்டிப்படைக்க தொடங்கினார். பந்துகளை எல்லைக்கோட்டுக்கு விரட்டி கொண்டு இருந்த யுவராஜ். 80 பந்துகளில் 84 ஓட்டங்களை பெற்றதோடு களத்தடுப்பில் ஆபத்தான மைக்கேல் பெவனை ரன் அவுட் ஆக்கி 20 ஓட்டங்களால் இந்திய அணியை வெற்றி பெற செய்து ஆட்டநாயகனாக ஜொலித்தார். அடுத்து அரையிறுதியில் தென்னாப்பிரிக்க அணிக்கு எதிராக 41ஓட்டங்கள், பந்து வீச்சில் ஒரு இலக்கு என அசத்த இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. ஆனாலும் இந்திய அணி இறுதிப்போட்டியில் நியூசிலாந்து அணியிடம் தோல்வி அடைந்து நாடு திரும்பியது. ஆனாலும் யுவராஜ் சிங் ஒரு நம்பிக்கையை விதைத்து இருந்தார் என்றே சொல்லலாம்.



ஆனாலும் அடுத்ததாக நடைபெற்ற இந்தியா, இலங்கை, சிம்பாவே அணிகள் மோதிய முத்தரப்பு தொடரில் ஐந்து போட்டிகளில் மொத்தமாக 55 ஓட்டங்களையே பெற்றார் யுவராஜ். அதன் பின்னர் நடைபெற்ற சிம்பாவே அணியுடனான ஒரு நாள் தொடரிலும் சொதப்ப இந்திய அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார் யுவராஜ் சிங். சிறிய இடைவெளிக்கு பின் 2001ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற Coco-Cola கோப்பை தொடரில் ஆடுவதற்கான இந்திய அணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட யுவராஜ் சிங், ஐந்தாவது ஒருநாள் போட்டியில் ஆட்டமிழக்காமல் 98ஓட்டங்களை பெற்று இருந்தார். ஆனாலும் எஞ்சிய போட்டிகளில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு துடுப்பாட்டத்தில் ஜொலிக்கவில்லை யுவராஜ். ஆனாலும் பந்து வீச்சில் எட்டு இலக்குகளை வீழ்த்தி தன்னால் சகலதுறைகளிலும் பங்களிப்பு செய்ய முடியும் என்பதை நிரூபித்து கொண்டார். ஆனாலும் அடுத்ததாக நடைபெற்ற இந்தியா, தென்னாப்பிரிக்கா, கென்யா அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு தொடரில் 6இன்னிங்ஸ்களில் வெறுமனே 69 ஓட்டங்களே பெற முடிந்தது. விளைவு இந்திய அணியில் இருந்து மீண்டும் கழற்றி விடப்பட்டார் யுவராஜ். அவருக்கு பதிலாக தினேஷ் மொங்கியா அணிக்குள் உள்வாங்கப்பட்டு இருந்தார். தொடர்ச்சியாக அணிக்குள் வருவதும் போவதுமாக நிலையான இடத்தை இந்திய அணிக்குள் பெற்றுக் கொள்ள சிரமப்பட்டார் யுவராஜ். அதற்கு ஒரு தொடர்ச்சியான ஏறுமுகம் தேவைப்பட்டது. அணியில் இருந்து நீக்கப்பட்ட யுவராஜ் சிங் உள்ளூர் போட்டிகளில் கவனம் செலுத்தினார். ஆனாலும் 2001ஆம் ஆண்டு ரஞ்சிக் கிண்ண தொடரில் குறிப்பிடும்படியாக யுவராஜ் ஆடவில்லை. அடி மேல் அடியே கிடைத்தது. ஆனாலும் அந்த வருட இறுதியில் நடைபெற்ற துலீப் கிண்ண தொடரில் தெற்கு மண்டல அணிக்கு எதிராக 209 ஓட்டங்களை யுவராஜ் குவிக்க, அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த சிம்பாவே அணிக்கு எதிரான இறுதி இரண்டு போட்டிகளுக்கான இந்திய அணிக்கு அழைக்கப்பட்டு இருந்தார் யுவராஜ். ஏற்கனவே சிம்பாவே அணி முதல் மூன்று போட்டிகளில் 2:1 என முன்னிலையில் இருந்தது. மீண்டும் இந்திய அணியில் வாய்ப்பு. இதிலும் ஏமாற்றினால் அடுத்து என்ன நடக்கும் என்பது எல்லாம் கேள்விக்குறி?.

தனது இடத்திற்காக யுவராஜ் போராடுவார்....

ஆட்டம் தொடரும்....




இவ்மின்னிதழ் தூமி அமைப்பினரால் 2020.06.01 அன்று தூமி அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.